# மீன்வளத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2013-2014

## 1. முன்னுரை

மாநிலத்தின் உணவு உற்பத்தியில் மீன்வளம் முக்கிய பங்கு வகிப்பதுடன், பெருவாரியான மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பின் அங்கமாக உருவெடுத்துள்ளது. மீன்பிடித்தல் கடந்த ஐம்பதுகளின் தொடக்கத்தில் பாரம்பரிய வாழ்வாதார நடவடிக்கைகளாகத் தொடங்கி, தற்சமயம் வணிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளதுடன், மத்திய மற்றும் மாநிலத்தின் பொருளாதாரம், வாழ்வாதாரம், உணவுப்பாதுகாப்பு, கிராமப்புற வேலை வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் அந்நிய செலாவணி ஈட்டுதல் ஆகியவற்றில் பெரும் பங்கு வகிக்கிறது.

மீன் உற்பத்தியில் சீரான உயர்வு மற்றும் மீன்வள ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றில், தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாக விளங்குகிறது. புதிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. கடல் மீன்வளப்பிரிவில், கடல் எல்லை பிரச்சனைகள், மீன்வள ஆதாரங்களை அளவிற்கதிகமாக பயன்படுத்துதல், பிடிக்கப்படும் மீன்களை கையாளுதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றிற்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் உருவாக்குவதற்கான தேவைகள் மற்றும் உள்நாட்டு மீன்வளப்பிரிவில், குறைந்த அளவிலான மழையினால் குறுகிய கால நீர் சேமிப்பு, மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் நீர்நிலைகளில் நீர்வரத்துக்கான கால இடைவெளி, மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் தரமான மீன் உணவு ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் உருவாக்குவதற்கான தேவைகள், குறுகிய பருவகால குளங்களில் இருப்பு செய்யத் தேவைப்படும் உகந்த

மீன் வகைகள் போன்ற இடர்பாடுகளை எதிர்கொள்ள நேரிடுகிறது.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவித்தல், மீன்பிடி துறைமுகம் / மீன் இறங்கு தளம் மற்றும் மீன் விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்ற வகையில் மீன்பிடிக்கலன்களை மாற்றிட அல்லது புதிதாக வாங்கிடும் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல், கடலோர மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்காக்களை அமைத்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல், கடல் மீனவர்களுக்கு தடையற்ற தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குதல் போன்ற பல புதிய திட்டங்களை கடல் மீனவர்களின் நலனுக்காக அரசு செயல்படுத்தி வருகின்றது. உள்நாட்டு நீர்நிலைகளை புனரமைத்தல் / மறுசீரமைத்தல், அரசு மற்றும் தனியார் பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தியினைப் பெருக்குதல், பண்ணைக் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல், மிதவைக் கூடுகளில் மீன்வளர்ப்பு மற்றும் நீர்த்தேக்க மீன்வள உரிமையை குத்தகைக்கு விடுதல் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் உள்நாட்டு மீன்வளத்தினை பெருக்கிட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

தமிழக அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

- மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாத்தல்.
- மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது பாதுகாப்பினை உறுதி செய்தல்.

- பல்வேறு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளித்தல்.

- நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

- மீன்களை சுகாதாரமாகக் கையாளவும் மற்றும் பதப்படுத்தவும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் / வலுப்படுத்துதல் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனையை அதிகப்படுத்துதல்.

- சட்டப்பூர்வமான ஒழுங்கு நெறிமுறைகளை அமலாக்கம் செய்வதன் மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வள இருப்புகளை அதிகப்படுத்துதல் மற்றும் செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல்.

- மீனவர்கள் தூரக் கடல் மீன்பிடிப்பு / ஆழ்கடல் மீன்பிடிப்பினை மாற்று முறை மீன்பிடிப்பாக மேற்கொள்வதற்கு நிதி உதவி அளித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பதனிடும் அலகினை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்தல்.

- சுற்றுச்சூழலுக்கு உகந்த வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு / மீன்பிடிப்பு முறைகளை மேம்படுத்துதல்.

## 2. மீன்வளத்துறையின் நோக்கங்கள்

நோக்கங்கள் பின்வருமாறு.

- மாநிலத்தில் உள்ள மீன் வளங்களைப் பாதுகாத்து, மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்து வளங்குன்றா மீன் உற்பத்தியினை அடைதல்.
- பயன்படுத்தப்படாமல் இருக்கும் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்திடவும், அண்மைக் கடல் பகுதிகளில் அளவிற்கதிகமான மீன்பிடிப்பினைக் குறைத்திட மீனவர்களை மாற்று பிடிப்பிற்கு மாற்றுதல்.
- மீன்களைக் கரை இறக்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், மீன்பதப்படுத்தல் மற்றும் விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
- மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு / மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- மீன்வளம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் நேரடி / மறைமுக வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- ஏற்றுமதி அபிவிருத்தி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.

## 3. தமிழகத்தின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டின் மீன்வளமானது கடல், நன்னீர் மற்றும் உவர்நீர் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பரந்து விரிந்த கடல் மற்றும் நன்னீர் வளங்கள் மாநிலத்தின் மீன்வள மேம்பாட்டிற்கு மிகுந்த வாய்ப்பளிக்கின்றன.

### 3.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு **1.9** இலட்சம் சதுர கிலோ மீட்டர் தனி உரிமை பொருளாதார மண்டலத்தையும், 41,412 சதுர கிலோ மீட்டர் கடற்படு நிலத்தொடரையும் கொண்டுள்ளது. பொதுவாக, அண்மைக்கடல் மீன்வளம் மிகுதியாக பயன்படுத்தப்பட்ட நிலையில், தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்வளமானது, பெரிதும் உகந்த அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

கடல் மீன்வளம் குறித்த விபரங்கள் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் (2012–13) ஒரு கண்ணோட்டம்**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி. மீ. |
| கடலோர மாவட்டங்களின் எண்ணிக்கை | 13 |
| மீனவ கிராமங்களின் எண்ணிக்கை | 608 |
| கடல் மீனவ மக்கள் தொகை | 8.11 இலட்சம் * |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணையதளம் மூலம்)** | |
| 1. மீன்பிடி விசைப்படகுகள் | 5,600 |

| | |
|---|---|
| **2.** நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் அல்லாதவை ) | 27,426 |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் | 3 (சென்னை, தூத்துக்குடி மற்றும் சின்னமுட்டம்) |
| கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் | 4 (தேங்காய்பட்டினம், குளச்சல், முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலத்துறை) |
| நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் | 5 |
| மீன்பிடி படகு அணையும் இடங்கள் (ஜெட்டிகள்) | 8 |
| கடற்கரை இறங்கு தளங்கள் | 363 |
| கடல்மீன் உற்பத்தி (2012–13) | 4.28 இலட்சம் டன் |
| ஏற்றுமதி (2012–13) ** | 77,791 மெட்ரிக் டன் (மதிப்பு ரூ. 2,995 கோடி ) |

ஆதாரம் :

* தமிழ்நாடு கடல் மீனவ மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2010

** கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA) (உத்தேச மதிப்பு).

### 3.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழக மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரிடையே உள்நாட்டு மீன்வளம் நல்ல வரவேற்பினை பெற்று ஒரு முக்கிய வாழ்வாதாரமாக உருவாகி வருகின்றது. நமது மாநிலத்தின் உள்நாட்டு மீன்வளமானது, மீன்பிடிப்பிற்கும் மற்றும் மீன்

வளர்ப்பிற்கும் ஏற்ற நீர்த்தேக்கங்கள், பெரிய நீர்பாசன ஏரிகள், நீண்ட மற்றும் குறுகிய பருவ கால நீர்த்தேக்க குளங்கள் மற்றும் குட்டைகள் ஆகிய பலவிதமான நீராதாரங்களை உள்ளடக்கியுள்ளது. அட்டவணை 2ல் உள்நாட்டு மீன்வளம் குறித்த விபரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: உள்நாட்டு மீன்வளம் - ஓர் பார்வை**

| | |
|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | 3.75 இலட்சம் ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் | 52,055 ஹெக்டேர் |
| பெரிய நீர்பாசன ஏரிகள் மற்றும் பருவகால குளங்கள் | 2,65,641 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கள் தொகை | 2.25 இலட்சம் |
| மீன் உற்பத்தி (2012-13) | 1.85 இலட்சம் டன் |

இவ்வளங்களை சீரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் 4.50 இலட்சம் மெட்ரிக் டன் மீன் உற்பத்தி இலக்கினை அடையலாம் என்கின்ற நிலையில், தற்பொழுது உள்நாட்டு மீன் உற்பத்தி 1.85 இலட்சம் மெட்ரிக் டன்களாகவே இருக்கிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியை, அதன் திறனுக்கேற்றவாறு 4.50 இலட்சம் மெட்ரிக் டன் மீன் உற்பத்தி இலக்கினை அடைவதற்கு, 700 மில்லியன் மீன்குஞ்சு விரலிகள் தேவைப்படுகின்றன.

## 3.3 உவர்நீர் மீன்வளம்

தமிழகத்தில் 56,000 ஹெக்டேர் பரப்பு உவர்நீர்ப் பகுதிகள் உள்ளன. நமது மாநிலத்தில் இறால் வளர்ப்பு,

குறிப்பிட்ட நோய் கிருமிகளற்ற "வெள்ளை கால் இறால்கள்" (***லிட்டோபினேயஸ் வெனாமி***) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ஒரு முக்கிய வணிகத் தொழிலாக வியத்தகு வளர்ச்சியினை அடைந்து வருகிறது. 2011-12–ஆம் ஆண்டில், **6,019** ஹெக்டேர் பரப்பில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, ரூ.519.22 கோடி மதிப்பிலான 15,245 மெட்ரிக் டன் இறால்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உவர்நீரில், நீர்வாழ் உயிரின வளர்ப்பை ஊக்குவிக்கவும், முறைப்படுத்திடவும் சென்னை மாவட்டத்தை தவிர்த்து மற்ற அனைத்து கடலோர மாவட்டங்களை உள்ளடக்கிய 5 உவர்நீர் மேம்பாட்டு முகமைகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

## 4. நிர்வாக அமைப்பு

மீன்துறை இயக்குநர், துறையின் தலைவராகவும், தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறைச் சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

மாநில அரசு மீனவர்களின் நலனுக்காகவும் மீன்வளத்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முந்தைய ஆண்டுகளை ஒப்பிடும் போது, இந்நிதியாண்டில் மீன்வளத்துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. துறையின் நோக்கங்களை அடைவதற்கு பல்வேறு நிலைகளிலும் போதுமான மனித ஆற்றல் இல்லாமையே முக்கிய பிரச்சனையாக உள்ளது. எனவே, மீன்வளத் துறையின் பல்வேறு திட்டங்களை திறம்பட நிர்வகித்திட ஏதுவாக, 2012-13–ஆம் ஆண்டிற்கான மீன்வள மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு மீன்வளத்துறை

அமைச்சர் அவர்கள், மீன்வளத்துறையின் நிர்வாக அமைப்பினை மறுசீரமைப்பு செய்யப்படும் என சட்டப் பேரவையில் அறிவித்தார்.

இதன் அடிப்படையில், தலைமை அலுவலகத்தில் இரண்டு இணை இயக்குநர் பதவிகள் கூடுதல் மீன்துறை இயக்குநர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், மாநில அளவில் **9** மண்டலங்கள் உருவாக்கப்பட்டு அவைகள் **3** மீன்துறை இணை இயக்குநர்கள் மற்றும் **6** மண்டல மீன்துறை துணை இயக்குநர்கள் தலைமையில், **49** மீன்துறை உதவி இயக்குநர்களின் மேற்பார்வையில் மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள் கண்காணிப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தலைமைப் பொறியாளர் தலைமையில் அவருக்கு உதவிடும் வகையில் போதுமான பணியாளர்களுடன், பொறியியல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள பொறியியல் பிரிவு இயங்கி வருகிறது.

மறு சீரமைப்பினை தவிர்த்து, 2012-13ஆம் ஆண்டில் துறையில் பல்வேறு நிலையிலுள்ள 244 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு நிலையிலுள்ள 149 பணியிடங்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

**அட்டவணை3: 2012–13 ஆம் ஆண்டில் நிரப்பப்பட்ட பணியிடங்களின் விவரம்**

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மீன்துறை துணை இயக்குநர் | 06 |
| 2 | மீன்துறை உதவி இயக்குநர் | 12 |
| 3 | நேர்முக உதவியாளர் | 08 |
| 4 | கண்காணிப்பாளர் | 18 |
| 5 | உதவியாளர் | 16 |
| 6 | இளநிலை உதவியாளர் | 07 |

| | | |
|---|---|---|
| 7 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 02 |
| 8 | தட்டச்சர் | 05 |
| 9 | பதிவுறு எழுத்தர் | 05 |
| 10 | அலுவலக உதவியாளர் | 02 |
| 11 | மீன்துறை சார் ஆய்வாளர் | 28 |
| 12 | மீன்துறை மேற்பார்வையார் I | 10 |
| 13 | மீன்துறை மேற்பார்வையாளர் II | 32 |
| 14 | மீன்வள உதவியாளர் | 59 |
| 15 | கடல் முதலாள் | 07 |
| 16 | ஊர்தி ஓட்டுநர் | 25 |
| 17 | பெருக்குநர் | 02 |
| | **மொத்தம்** | **244** |

## 5. தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### i. கச்சத் தீவினை திரும்பப் பெறுதல் – பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலைமை.

கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் பாரம்பரிய மீன்பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுதல் ஆகியவற்றை தமிழக அரசு முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த அரசு மே மாதம் 2011 முதல், இக்குறிக்கோளுக்கு ஆதரவான நிலையில், கடந்த 1974ம் ஆண்டில் மத்திய அரசு தன்னிச்சையாக இலங்கைக்கு கச்சத்தீவினை தாரை வார்த்ததை திரும்பப் பெற்று, தமிழக மீனவர்களின் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் உரிமையை காக்கும் நோக்கில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், 2008ஆம் ஆண்டு தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் கச்சத்தீவினை மீட்பது தொடர்பாக தொடரப்பட்ட

நீதிப்பேராணை விண்ணப்பம் (உரிமையியல்) எண் 561/2008ல், தமிழக அரசின் வருவாய்த்துறையை ஒரு வாதியாக இணைத்துக் கொள்ள, கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் ஒருமித்த தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதன்படி, மேற்காணும் வழக்கில் வருவாய்த்துறையினையும் வாதியாக இணைத்துக் கொள்ள இணைப்பு மனு ஒன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும், இவ்வழக்கினை விரைவாக எடுத்துக் கொள்ள "துரித விசாரணை" மனு ஒன்று கடந்த 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு இந்நேர்வில் முனைப்புடன் செயல்பட்டு வருவதற்கு மேற்கண்ட செயல்பாடுகள் சான்றாக அமைந்துள்ளன. பாக் வளைகுடா பகுதியில் பாரம்பரியமாக தங்களது வாழ்வாதாரத்திற்காக மீன்பிடித் தொழில் செய்துவரும் பாக் வளைகுடா மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள், அவ்வப்போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுதல் மற்றும் துன்புறுத்துதல் போன்ற நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், மேற்காணும் நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## ii. மீனவர்கள் மீதான துன்புறுத்துதலை தடுத்தல் மற்றும் மீனவர்களை விடுவிக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

பாக் வளைகுடாப்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாக் நீரிணைப்புப் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருக்கும்போது வழி தவறி பன்னாட்டு கடல் எல்லையைத் (IMBL) தாண்டி செல்ல நேரிடும் சமயங்களில், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுதல் / துன்புறுத்தலுக்கு ஆளாதல் போன்ற நிகழ்வுகள் நேரிடுகிறது.

இவ்வாறான நிகழ்வுகளின் தீவிரத்தினை கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த மே திங்கள் 2011 முதல் 17 கடிதங்கள் வாயிலாக பல்வேறு நேர்வுகள் குறித்து மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதி, இந்திய அரசின் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கக்கோரி மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்கள். இதனில், 07.06.2011, 21.06.2011, 04.07.2012, 23.07.2012, 05.12.2012, 04.03.2013, 07.03.2013, 14.03.2013 மற்றும் 07.04.2013 ஆகிய தேதியிட்ட 9 கடிதங்கள் வாயிலாக சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுவித்திடவும், 10.10.2011, 07.11.2011, 16.11.2011, 26.11.2011, 17.03.2012, 28.06.2012, 20.08.2012 மற்றும் 20.03.2013 ஆகிய தேதியிட்ட 8 கடிதங்கள் மூலமாக நடுக்கடலில் தமிழக மீனவர்களின் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்திடவும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் பயனாக, 2011ஆம் ஆண்டில் (மே 2011லிருந்து) 217 மீனவர்களும், 2012ஆம் ஆண்டில் **219** மீனவர்களும் மற்றும் 2013ஆம் ஆண்டில் 69 மீனவர்களும் ஆக மொத்தம் 505 சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள், குறுகிய கால இடைவெளியில் இலங்கை அரசினால் விடுதலை செய்யப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர். மேலும், இலங்கை சிறையில்வாடும் மீதமுள்ள அப்பாவி மீனவர்களையும் விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்விதமாக மீனவர்கள் இடர்பாடுகளை சந்திக்கும் அனைத்து தருணங்களிலும், அவர்களுக்கு உறுதுணையாகவும், துயர்நேரிடும் பொழுது அவர்களுக்கு ஆதரவாகவும் தமிழக அரசு இருக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கிறது.

## 6. கடல் மீன்வளம்

### அ) நலத்திட்டங்கள்

இந்த அரசு, மீனவர்களின் நலனுக்கு எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து வருகிறது. பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### 6.1 மீன்பிடி தடை காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவித்தொகையை ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தி வழங்குதல்

கடலில் மீன்களின் இனப்பெருக்கக் காலத்தினைக் கருத்தில் கொண்டும், கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திடவும், 2001-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் (கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் மே 29 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 15 முதல் ஜூலை 29 வரையிலும்) 45 நாட்களுக்கு கடலில் மீன்பிடிப்பதை அரசு தடைசெய்துள்ளது. மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில், மீன்பிடிக்கலன்களில் பணியாளர்களாகவும்/ தினக்கூலிகளாகவும் தொழில் புரியும் மீனவர்கள் வருமானம் ஈட்டுவதற்கு வேறு வழியில்லாததால், அவர்களது குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மீன்பிடிக் கலன்களில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மீனவர்களின் துயரத்தைக் குறைத்திட, இந்த அரசு வழங்கி வந்த நிவாரண உதவித் தொகையினை, 2011-12 ஆம் ஆண்டில், ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தியது. இத்திட்டம், 24.5.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

2012-13ஆம் ஆண்டிற்கு 1.60 இலட்சம் மீனவ குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில், மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக அரசால் ரூ.32 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது. 1.55 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.30.94 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.2 கடல் மீனவர் தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

மத்திய அரசின் ஆதரவோடு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது, மத்திய–மாநில அரசுகளின் சமவிகித நிதியுதவி பங்களிப்போடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும், எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/–ம் ஆக மொத்தம் ரூ.600/- ஐ மீனவர்கள் தங்களது பங்குத் தொகையாகச் செலுத்துகின்றனர். இத்தொகைக்கு சமமாக, மத்திய–மாநில அரசுகளின் பங்குத்தொகையாக தலா ரூ.600/- வீதம் ரூ.1,200/–யையும் சேர்த்து, மொத்தத் தொகையான ரூ.1,800/–ஐ மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத காலங்களுக்கு பயனாளிகளுக்கு நிவாரணமாக பட்டுவாடா செய்யப்படுகிறது.

2012-13ஆம் ஆண்டில், ரூ.24.45 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டது (மத்திய–மாநில அரசுகளின் பங்குத் தொகை). இத்திட்டத்தின் மூலம், 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,43,877 கடல் மீனவர்களுக்கு ரூ.17.26 கோடி நிவாரணத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான நிவாரணத் தொகை ஏப்ரல் திங்கள் 2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் நேரடியாக விரைந்து நிவாரணத் தொகையினை பெற்றிடும் வகையில் மீன்வளத்துறை, இத்தொகையினை மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் விடுவித்து வருகிறது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.3 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம் மாநிலத்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/- ம் ஆக மொத்தம் ரூ.600/- ஐ மீனவ மகளிர் தங்களது பங்குத் தொகையாக செலுத்துகின்றனர். மாநில அரசின் பங்காக, ரூ.1,200/- வழங்கப்பட்டு, மொத்தத் தொகையான ரூ.1,800/–ஐ மீன்பிடிப்பு இல்லாத காலங்களுக்கு, பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

2012-13ஆம் ஆண்டிற்கு மாநில அரசின் நிவாரணத் தொகையாக ரூ.20.53 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,32,814 கடல் மீனவ மகளிருக்கு ரூ.15.94 கோடி நிவாரணத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ மகளிருக்கான நிவாரணத் தொகை ஏப்ரல் திங்கள் 2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மீனவ மகளிர் நேரடியாக, விரைந்து நிவாரணத் தொகையினை பெற்றிடும் வகையில்

மீன்வளத்துறை, இத்தொகையினை மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் பணத்தை விடுவித்து வருகிறது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.4 மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை ரூ.4,000/- வழங்குதல்

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் கடல் மீனவர் / மீனவ மகளிருக்கு கடலில் மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகை ரூ.1,800/– அவர்களின் குடும்பத்தினை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை என அரசு கருதியது. எனவே, கடல் மீன்பிடிப்பு குறைந்த காலத்தில், கடலோர மாவட்டங்களிலுள்ள கடல் மீனவ குடும்பங்களின் துயரினை துடைத்திடும் பொருட்டு ஆகஸ்ட் 2011-இல், சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கும் இப்புதிய திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, இப்புதிய திட்டத்தினை 10-11-2011 அன்று துவக்கி வைத்தார்கள்.

2012-13ஆம் ஆண்டில், 1.70 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகை வழங்கும் பொருட்டு ரூ.68.05 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,13,459 கடல் மீனவ குடும்பங்களுக்கு இதுவரை ரூ.45.38 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி

மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான தொகை ஏப்ரல் திங்கள் 2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் நேரடியாக, விரைந்து நிவாரணத் தொகையினை பெற்றிடும் வகையில் மீன்வளத்துறை, இத்தொகையினை மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் விடுவித்து வருகிறது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.5 மீனவர் விபத்துக் குழுக் காப்புறுதி திட்டம்

மத்திய அரசின் ஆதரவோடு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், மத்திய–மாநில அரசுகள் சமவிகிதமாக பங்குத்தொகை அளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒரு மீனவருக்கான மொத்த காப்புறுதி சந்தாத் தொகை ரூ.30/-ஐ, மத்திய–மாநில அரசுகள் சேர்ந்து (ரூ.15/– வீதம்) செலுத்துகின்றன. மீனவர்களிடமிருந்து சந்தாத் தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. விபத்தில் மரணம் / நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில் மீனவருக்கு ரூ.1,00,000/- காப்புறுதி நிவாரணம் வழங்கப்படுகிறது. ஓரளவு ஊனமடையும் மீனவருக்கு ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

10-12-2012 முதல் 09-12-2013 முடியவுள்ள காலத்திற்கு 6.21 இலட்சம் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் / மீனவமகளிருக்கு காப்புறுதி சந்தாத் தொகையாக ரூ.93.20 இலட்சம் (மாநில அரசின் பங்காக) புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு (FISHCOPFED) செலுத்தப்பட்டு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. 2012-13 ஆம் ஆண்டில், 123 நேர்வுகளில் காப்புறுதி நிவாரணத் தொகையாக ரூ.1.15 கோடி காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

விபத்து காப்புறுதி கேட்பு கருத்துருக்கள் மீது தீர்வு கண்டு நிவாரணத் தொகைகளை விரைந்து அளித்திடும் பொருட்டு, இவ்வரசு மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக புதுடெல்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்தின் கிளை அலுவலகம், 01.03.2013 முதல் சென்னையில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.6 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல்

பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ், நாட்டுப்படகுகளுக்கு வெளிப்பொருத்தும் (OBM) / உட்பொருத்தும் (IBE) இயந்திரங்களை வாங்குவதற்காக, அலகு ஒன்றின் விலையில் 50 விழுக்காடு அல்லது ரூ.30,000/-ம் இவற்றில் எது குறைவோ, அந்தத் தொகை மானியமாக மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டமானது, மத்திய–மாநில அரசுகளின் சம விகிதப் பங்களிப்பினைக் கொண்டதாகும்.

2012-13ஆம் ஆண்டிற்கு 1,333 நாட்டுப்படகுகளை இயந்திரமயமாக்க ரூ.4 கோடி (மத்திய – மாநில அரசுகளின் பங்கு) அரசு ஒப்பளிப்பு வழங்கி விடுவித்துள்ளது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.7 அதிவேக எரியெண்ணெய் மீதான (High Speed Diesel) மத்திய கலால் வரித் தொகையினை திருப்பி அளித்தல்

இத்திட்டம், 100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியாக வழங்கப்படும் திட்டமாகும். விசைப்படகுகளின் இயக்கச் செலவினம் அதிகரித்து, மீன்பிடித் திறன் குறைந்து வருவதால், விசைப்படகு உரிமையாளர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் விதமாக, அதிவேக எரியெண்ணெய் மீதான மத்திய கலால்வரியினை, விசைப்படகு உரிமையாளர்களுக்கு அரசு மானியமாகத் திருப்பி அளிக்கிறது. அதிவேக எரியெண்ணெய்க்கான திருப்பியளிக்கப்படும் கலால் வரியானது, லிட்டர் ஒன்றிற்கு ரூ.3/- வீதம் மாதம் ஒன்றிற்கு ஒரு விசைப்படகிற்கு அதிகபட்சம் 500 லிட்டருக்கு, தீவிர மீன்பிடிப்பு மாதங்களுக்கு எரியெண்ணெய்க்கான மானியமாக வழங்கப்படுகிறது. இந்த மானியத்தொகையானது, 10வது ஐந்தாண்டு திட்டத்திற்கு முந்தைய காலத்தில் பதிவுசெய்யப்பட்ட 20 மீட்டர் நீளத்திற்கு குறைவான மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய, விசைப்படகு உரிமையாளர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தை செயல்படுத்திட இயலாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் 13.06.2011 அன்று அளித்த கோரிக்கை மனுவில், இத்திட்டத்தில் பயனடைவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகள் நடைமுறைக்கும், அனைத்து கடலோர மாநிலங்களிலும் செயல்படுத்துவதற்கும் இயலாத நிலையில் உள்ளதால், அவைகளை உடனடியாக மறு ஆய்வு செய்து நிபந்தனைகளைத் தளர்த்தி, இத்திட்டம் செயலாக்கம் பெறும் வகையில் மாற்றி அமைத்திட கோரப்பட்டுள்ளது. இதனில், மத்திய அரசால் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்பட்டு தெரிவிக்கப்படவில்லை.

## 6.8 மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெயினை வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு, தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு விற்பனைவரி விலக்களித்து வருகிறது. இதன்படி, தலா ஒவ்வொரு விசைப்படகிற்கும், வருடத்திற்கு மீன்பிடிப்பு உள்ள மாதங்களுக்கு அதிகபட்சமாக 15,000 லிட்டரும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகிற்கும் வருடத்திற்கு அதிகபட்சமாக 3,600 லிட்டரும் விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெயை மீனவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டம், 2013-14-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.9 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெயினை மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிக்கலன்களின் உரிமையாளர்களுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட

தொழிலக மண்ணெண்ணையினை மானிய விலையில், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25/-வீதம் (மாதமொன்றிற்கு 200 லிட்டர் வீதம்) 2011-12ஆம் ஆண்டு வரை அரசால் வழங்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தற்போது வழங்கப்படும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெயின் அளவினை 200 லிட்டரிலிருந்து 250 லிட்டர் வீதம் மாதம் ஒன்றிற்கு / படகு ஒன்றிற்கு உயர்த்தி வழங்கப்படும் என ஆணையிட்டு, மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய 5,000 நாட்டுப்படகுகள் பயன்பெறும் வகையில் ரூ.47.60 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, 2012-13ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம், 2013-14-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.10 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 வது மற்றும் 12வது வகுப்பு மாணவ / மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் கல்வி கற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு 10 வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வில், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு, தமிழக அரசால் ரொக்கப்பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2010-11ஆம் கல்வியாண்டு முதல் 10வது மற்றும் 12வது வகுப்புகளில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற

மாணவ/மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் ஊக்கத் தொகையினை இரட்டிப்பாக்கி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன் விவரம் அட்டவணை **4.**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது:**–**

**அட்டவணை 4. ஊக்கத் தொகை விவரம்**

| **வ. எண்** | **விவரம்** | **ஊக்கத் தொகை (ரூபாயில்)** | |
|---|---|---|---|
| | | **12வது வகுப்பு** | **10வது வகுப்பு** |
| 1) | மாநில அளவில் – முதலிடம் | 10,000/- | 6,000/- |
| 2) | மாவட்ட அளவில் – முதலிடம் | 6,000/- | 2,000/- |
| 3) | மாவட்ட அளவில் – இரண்டாமிடம் | இல்லை | 1,000/- |
| 4) | மாவட்ட அளவில் – மூன்றாமிடம் | இல்லை | 600/- |

இத்திட்டம், 2013-14-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## ஆ) நிவாராணத்திட்டங்கள்

### 6.11 பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட தினஉதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும்போது பக்கத்து நாட்டினரால் சிறைபிடிக்கப்படும், மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், மீனவர்கள் வீடு திரும்பும்வரை நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் தின உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன், தின உதவித் தொகையினை ரூ.50/-லிருந்து ரூ.250/- ஆக

உயர்த்தியும், திட்டத்தை செயல்படுத்திட ரூ.6. இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைத்திட ஏதுவாக இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2012-13ஆம் ஆண்டில், பக்கத்து நாட்டினரால் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.72 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி, பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு **29.11.2011** அன்று முதல் இலங்கை சிறையில் வாடிவரும் இராமேஸ்வரத்தை சேர்ந்த **5** மீனவர்களை விடுவிக்கும் பொருட்டு வழக்கு நடத்துவதற்கு அரசு ரூ.**5** இலட்சம் வழங்கியுள்ளது. அவர்களது குடும்பத்தில் வருவாய் ஈட்டிடும் நபர்கள் இன்மையால் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியை குறைக்கும் பொருட்டு இந்த அரசு, இதனை தனி நேர்வாகக் கருதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ.**2** இலட்சம் நிவாரண உதவி அளித்துள்ளது.

2013-14 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.12 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, மீனவர் வீடு திரும்பும் வரை தினப்படியாக நாளொன்றுக்கு ரூ.50/- அல்லது மாதமொன்றுக்கு ரூ. 1,500/- வீதம் தின உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு

பொறுப்பேற்றவுடன், இத்தின உதவித் தொகையானது ரூ.50/- (மாதமொன்றுக்கு ரூ.1,500/-) லிருந்து ரூ.250/- (மாதமொன்றுக்கு ரூ.7,500/-) ஆக உயர்த்தி, 2011-12 ஆம் ஆண்டில் ரூ.12. இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டது.

2012-13ஆம் ஆண்டில், கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன 19 மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.11.93 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2013-14 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.13 இலங்கை கடற்படை மற்றும் இதரர்களின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கும் /காயமடையும் மீனவருக்கும் நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், சர்ச்சைக்குரிய தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபபட்டிருக்கும் நேர்வுகளில், இயந்திர கோளாறு மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக இலங்கைக் கடற்பகுதிக்குள் படகுகள் அடித்துச் செல்லப்படும் போது, இலங்கை கடற் படையினரால் சிறைபிடித்தல் / துன்புறுத்துதல் சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகுதல் போன்ற நேர்வுகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3. இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக

இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5. இலட்சமாக வழங்கப்படுகிறது. கொடுங்காயம் மற்றும் சிறு காயம் அடையும் மீனவர்களுக்கு கருணைத்தொகையாக முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/-மும் வழங்கப்படுகிறது.

துபாய் நாட்டு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மீனவர் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5. இலட்சமும், காயமடைந்த மூன்று மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.50,000/- வீதமும், 2012-13ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

## 6.14 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வி செலவினங்களுக்காக தனிநிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / இறக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அன்றாட செலவினங்களை சமாளிக்க போதுமானதாக இல்லை. மேலும், அம்மீனவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி உள்ள நிலையில், அவர்களின் மகன்/மகள்களின் கல்வியை தொடர இயலாமல் உள்ளனர். மேலும், காணமல்போகும் / இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள் போதிய நிதி உதவி இல்லாததினால், தங்களது பள்ளி / கல்லூரிப்படிப்பினை தொடர இயலாத சூழ்நிலையில் வேறு வேலைவாய்ப்பினை தேடிச்செல்லும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

வருவாய் ஈட்டும் நபரை இழந்த குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலையையும் மற்றும் அந்த மீனவர்களின் குடும்பத்தின் பரிதாப நிலையையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.25 இலட்சம் தனி நிதியை தமிழ்நாடு மீனவர் நலவாரியம்மூலம் உருவாக்கி, காணமல் போன மற்றும் இறந்த மீனவரின் பிள்ளைகள் தொடந்து கல்வி கற்பதற்காக ஆகும் முழுச் செலவினத்தையும் அரசு ஏற்கும் என அறிவித்தார்கள். இந்த திட்டத்தில் கல்விக் கட்டணம் (அரசு நிர்ணயித்த கட்டணம்) மற்றும் தங்கும் விடுதிக் கட்டணம் அனைத்தையும் தனி நிதியிலிருந்து அரசு ஏற்கும்.

இத்திட்டம், 2013-14 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## இ. நிலைத்த நீடித்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL)

உலக வங்கி நிதியுவியுடன் “பிம்சூல்” (FIMSUL) திட்டம், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் மீன்வளத்துறையினால், **2010–11**ஆம் ஆண்டில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது. மீன்வள மேலாண்மை, மீன்வள பாதுகாப்பு, நிலைத்த வளங்குன்றா வளர்ச்சி மற்றும் எதிர்கால திட்டமிடுதலுக்கான கொள்கைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதலே, இத்திட்டத்தின் நோக்கமாகும். “பிம்சூல்” (FIMSUL) திட்டத்தின் பரிந்துரைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கடலோர பேரிடர் மற்றும் இன்னல் குறைப்பு திட்டத்தின் (CDRRP) கீழ் பல்வேறு பங்களிப்பாளர்களை ஈடுபடுத்திடும் மீன்வள மேலாண்மை முறைகளை கிராம அளவில் நிலைத்த நீடித்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை பகுதி II

(FIMSUL II) திட்டத்தினை செயல்படுத்திட தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## ஈ. உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகள்

### 6.15 மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பு திட்டத்தின் கீழ் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுமானம்.

#### i) குளச்சல் மீன்பிடி துறைமுகம் (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு ரூ.27.10 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளித்து, அதனடிப்படையில், அரசு இதுவரை நான்கு தவணைகளில் மத்திய–மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.19.12 கோடி நிதியை விடுவித்துள்ளது.

குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் முதல் கட்டமாக கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் அலை தடுப்புச் சுவர், அதற்குரிய அணுகு சாலை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. கிழக்கு அலை தடுப்பு சுவர் 120 மீட்டர் நீளத்திற்கு பகுதியாக முடிக்கப்பட்டும், மேற்கு அலை தடுப்பு சுவர் மொத்தமுள்ள 540 மீட்டர் நீளத்தில் இதுவரை 430 மீட்டர் நீளத்திற்கும் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கு அலை தடுப்பு சுவரில் கடல் பகுதியில் 180 மீட்டர் நீளத்திற்கு “கோர்லாக்” எனப்படும் கான்கிரீட் ஆர்மர்கள் அடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. கிழக்கு அலை தடுப்பு சுவர் மற்றும் மேற்கு அலை தடுப்பு

சுவர்களுக்கு அணுகு சாலை அமைக்கும் பணியும், எடைமேடை கட்டும் பணியும் முடிவுற்றுள்ளன. இந்த கடல் பகுதியில் ஏற்படுகிற புயல், வேகமான அலை மற்றும் கடல் கொந்தளிப்பு ஆகியவற்றினால் அலை தடுப்பு சுவர் பாதிப்படையாமல் தடுக்கும் பொருட்டு "புனேயில்'' உள்ள 'மத்திய' நீர், மின்விசை ஆராய்ச்சி நிலையம், (CWPRS) அலை தடுப்பு சுவரின் நீளம், அகலம் மற்றும் உயரம் ஆகியவற்றை அதிகப்படுத்த பரிந்துரைத்துள்ளது. அதனடிப்படையில், மத்திய அரசு குளச்சல் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு ரூ.87.75கோடி மதிப்பில் திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் முதல் கட்டப் பணியில் மீதமுள்ள பணிகளை முடிக்கவும், இரண்டாங்கட்ட பணியில் உள்ள படகு அணையும் தளம் (Wharf), தூர்வாருதல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### ii) தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் (மத்திய – மாநில அரசுகளின் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு ரூ.40 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளித்து, அதனடிப்படையில் அரசு இதுவரை மூன்று தவணைகளில் மத்திய–மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.30 கோடி நிதியை விடுவித்துள்ளது.

தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் முதற்கட்டமாக பிரதான அலை தடுப்பு சுவர் 580 மீட்டர் நீளத்திற்கு பகுதியாகவும், துணை அலை தடுப்பு சுவர் மொத்த நீளமான 120 மீட்டர் நீளத்திற்கு பகுதியாகவும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், பிரதான அலை தடுப்பு சுவரின் கடல் பகுதியில் 580 மீட்டர் மொத்த நீளத்தில் 560 மீட்டர்

நீளத்திற்கு "கோர்லாக்" எனப்படும் "கான்கிரீட் ஆர்மர்கள்" அடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. இந்த கடல் பகுதியில் ஏற்படுகிற புயல், வேகமான அலை மற்றும் கடல் கொந்தளிப்பு ஆகியவற்றினால் அலை தடுப்பு சுவர் பாதிப்படையாமல் தடுக்கும் பொருட்டு 'புனேயில்' உள்ள மத்திய நீர், மின்விசை ஆராய்ச்சி நிலையம் (CWPRS) அலை தடுப்பு சுவரின் நீளம், அகலம் மற்றும் உயரம் ஆகியவற்றை அதிகப்படுத்த பரிந்துரைத்துள்ளது. அதனடிப்படையில், மத்திய அரசு தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு ரூ.97.40 கோடி மதிப்பில் திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் முதற்கட்ட பணியில் மீதமுள்ள பணிகளை முடிக்கவும், இரண்டாங்கட்ட பணியில் உள்ள படகு அணையும் தளம் (Wharf), தூர்வாருதல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### iii) பூம்புகார் மீன்பிடி துறைமுகம் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 விகித பங்களிப்பு திட்டம்)

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு ரூ.78.50 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திட மாநில அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் அரசு முதல் தவணையாக மத்திய–மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.6.67 கோடி நிதியை விடுவித்துள்ளது. இத்திட்டப் பணியை துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### iv) சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்தல் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 விகித

**பங்களிப்பு திட்டம்)**

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய மத்திய அரசு ரூ.73.52 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணியை துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### v) இராமநாதபுரம் மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மூக்கையூர் மீன்பிடி துறைமுகம்

மூக்கையூர் கிராமத்தில் மீன்பிடி விசை படகுகளிலிருந்து மீன்களை இறக்குவதற்கும், படகுகளை நிறுத்துவதற்கும் உரிய அடிப்படை வசதிகள் இல்லாததினால், பல விசைப்படகு மீனவர்கள் இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் சென்று மீன்பிடி தொழிலை செய்து வருகின்றனர். இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மற்றும் அதன் அருகில் உள்ள கிராம மீனவர்களின் மீன்பிடித் தொழில் ஆதாரத்தை மேம்படுத்த, மூக்கையூரில் அலை தடுப்பு சுவர், படகு அணையும் தளம், தடுப்புச்சுவர், ஏலக்கூடம், மீன் உலர்களம், வலை பின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகளை ஏற்படுத்த மீன்வளத்துறை முனைந்துள்ளது. இதனால் மீன்பிடி விசைப் படகுகள் மூக்கையூரிலிருந்து தொழிலை மேற்கொள்ளவும், இராமேஸ்வரத்தில் மீன்பிடி விசைப் படகுகளின் நெரிசல் குறையவும் வாய்ப்பு உருவாகும். இதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 6.16 அரசு – தனியார் (PPP) பங்களிப்பு முறையில் கட்டப்படும் மீன்பிடித்துறைமுகங்கள்.

### i) கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மீன்பிடி துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம் முட்டத்தில், தனியார் பங்களிப்பில் “நிறுவுதல், இயக்குதல் மற்றும் மாற்றம் செய்தல்” [BOT]ன்கீழ் மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.53.92 கோடி. இத்திட்டப்பணி “திருவாளர்கள்.ஜேப்பியார் மீன்பிடி துறைமுகம் முட்டம் பிரைவேட் லிமிடெட்.,” என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு அலை தடுப்பு சுவர் கட்டும் பணி 480 மீட்டர் நீளத்திற்கு பகுதியாக முடிவுற்றுள்ளது. மேற்கு அலை தடுப்பு சுவர் கட்டும் பணியின் கடல் பகுதியில் “டெட்ரோபோட்” எனப்படும் “கான்கிரீட் ஆர்மர்” பயன்படுத்தி 1,890 மீட்டர் நீளத்திற்கு பணி முடிவுடையும் தருவாயில் உள்ளது. நுழைவுப் பகுதி (Head Section) பணி நடைபெற்று வருகிறது. நிலப்பகுதியில் அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகிறது. முட்டம் அருகில் உள்ள அழிக்கால் மற்றும் பிள்ளைத்தோப்பு கிராம மீனவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, முட்டம் மீன்பிடி துறைமுக வசதிகளை இக்கிராம மக்களும் பயன்படுத்த ஏதுவாக, “திருவாளர்கள். ஜேப்பியார் மீன்பிடி துறைமுகம், முட்டம் பிரைவேட் லிமிடெட்.,” நிறுவனத்தின் சொந்த செலவில், இக்கிராமங்களுக்கும் நீட்டிக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான பணிகளும் துவங்கப்பட்டுள்ளன.

### ii) கன்னியாகுமரி மாவட்டத்தில் இராஜாக்க–மங்கலம்துறை மீன்பிடி துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்காமங்கலம்–துறையில் தனியார் பங்களிப்பில் “நிறுவுதல் சொந்தமாக்குதல்,

இயக்குதல் மற்றும் மாற்றம் செய்தல்'' [BOOT]-ன்கீழ் மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.42.24 கோடி. இத்திட்டப்பணி, திருவாளர்கள் "இராஜாக்கமங்கலம்துறை மீன்பிடி துறைமுகம் பிரைவேட் லிமிடெட்'' என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு, கடற்கரை ஒழுங்குமுறை மண்டல குழுவின் (CRZ) ஒப்புதல் பெறப்பட்டு, இப்பணி துவங்கப்பட்டுள்ளது.

**iii) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மனக்குடி மீன்பிடி துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டம், மனக்குடியில், அரசு–தனியார் பங்களிப்பு திட்டத்தின் (PPP) கீழ் மீன்பிடி துறைமுகம் அமைக்க "தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வுகள்" [Techno Economic Feasiblity Report], விருப்பத்தினை தெரிவித்தல் [Expression of Interest], ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் [Request For Quotation], ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு [Notice Inviting Tender], கருத்துரு தயாரிப்பதற்கான விருப்பத்தைத் தெரிவித்தல் (Request for Proposal) சலுகைதாரருடனான ஒப்பந்தம், சட்ட ரீதியான ஆவணங்கள் மற்றும் இதர தேவையான ஆவணங்களைத் தயாரித்து அளிக்க ஆலோசகராக சென்னை "வாப்காஸ்"(WAPCOS) நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

## 6.17 உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புப் பணிகள் (ETRP)

உலக வங்கி நிதி உதவியுடன் (ETRP) கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த ரூ.103.25 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் இரண்டு மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைத்து நவீனப்படுத்துதல்.

### i) நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம்

நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்த, ரூ.35.65 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கடுவையாற்றில் தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் படகு அணையும் சுவர் கட்டும் பணி, தடுப்பு சுவர் கட்டுதல், துறைமுகத்தை ஆழப்படுத்துதல் மற்றும் பிரதான கால்வாய் ஆழப்படுத்துதல் ஆகியவற்றில் 90 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. கடுவையாற்றின் தெற்கு நிலப் பகுதியில், அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகளும் துவங்கப்பட்டுள்ளன.

### ii) பழையாறு மீன்பிடி துறைமுகம்

பழையாறு மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்த ரூ.27.56 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. படகு அணையும் சுவர் கட்டுதல், அலைத்தடுப்பு குறுக்குச் சுவர் அமைத்தல் மற்றும் அணுகு சாலை அமைத்தல் ஆகிய பணிகள் முடிவுற்றுள்ளன. துறைமுக நுழைவு கால்வாய் மற்றும் பிரதான கால்வாய் ஆழப்படுத்துதல் மற்றும் நிலப் பகுதியில், அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் 90 விழுக்காடு முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

## ஆ) இரண்டு ஆற்றுமுகத்துவாரங்களை நிரந்தரமாக திறந்துவைத்து நிலைப்படுத்துதல்

மீன்பிடி படகுகளின் போக்குவரத்தில் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் நோக்கில், இரண்டு இடங்களில் ஆற்று முகத்துவாரத்தை திறந்து நிலைப்படுத்துவதற்காக அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**i) நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசல் கிராமத்தில் உப்பனார் ஆற்றுமுகத்துவாரம்**

இப்பணிக்கு, ரூ.5.20 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அணுகு சாலை அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. அலைதடுப்பு குறுக்குச் சுவர் கட்டும் பணி **60** விழுக்காடு முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ii) கடலூர் மாவட்டம் – வெள்ளார் ஆற்றுமுகத்துவாரம்**

இப்பணிகளை மேற்கொள்ள ரூ.10.24 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கரை சுவர், பக்க கால்வாய் சுவர் மற்றும் கல் அடுக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. தூர்வாரும் பணி 85 விழுக்காடு முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இ) இரண்டு மீன் இறங்குதளங்கள் கட்டுதல்**

மீன்பிடி கலன்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கும் நோக்கிலும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளும் நோக்கிலும் கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் புதிய மீன்

இறங்கு தளங்களை அமைத்திட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

**i) நாகப்பட்டினம் மாவட்டம் – நாகூர்**

இப்பணிக்கு, அரசு ரூ.10.60 கோடி ஒப்பளிப்பு அளித்துள்ளது. படகு அணையும் சுவர் கட்டுமானப் பணி முடிவுற்றுள்ளது. தூர்வாரும் பணி மற்றும் நிலப்பகுதியில் அடிப்படை வசதிகள் கட்டுமானப் பணிகள் 70 விழுக்காடு முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ii) கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை – அன்னன்கோயில்**

அரசு ரூ.13.50 கோடி மேற்படி பணிக்கு ஒப்பளித்துள்ளது. படகு அணையும் சுவர் கட்டுமானப் பணி முடிவுற்றுள்ளது. தூர்வாரும் பணி மற்றும் நிலப்பகுதியில் அடிப்படை வசதிகள் கட்டுமானப் பணிகள் 85 விழுக்காடு முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### ஈ) சின்னமுட்டத்தில் குழாய் பனிக்கட்டி (Tube Ice Plant) நிலையம் கட்டுதல்

ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளும் நோக்கில் குளிர்பதன அறையினுடன் கூடிய குழாய் பனிக்கட்டி நிலையம் மற்றும் ஏலக்கூடம் நிறுவப்பட்டுள்ளது.

## 6.18 சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் மீன் இறங்குதளங்கள் கட்டுதல்

பல்வேறு கிராமங்களின் கடற்கரையில் கீழ்க்காணும் 10 இடங்களில் புதிய மீன் இறங்குதளங்கள் கட்ட அரசு ரூ.49.97 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

**அட்டவணை:5 மீன் இறங்குதளங்களின் விவரம்**

*(ரூ. கோடியில்)*

| இடம் | மாவட்டம் | மதிப்பு | குறிப்பு |
|---|---|---|---|
| 1.கடலூர் பெரியகுப்பம் | காஞ்சிபுரம் | 4.76 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2.எக்கியார்குப்பம் | விழுப்புரம் | 4.76 | |
| 3.ஆர்.புதுப்பட்டினம் | புதுக்கோட்டை | 4.41 | |
| 4.கீழக்கரை | இராமநாதபுரம் | 5.32 | |
| 5.திரேஸ்புரம் | தூத்துக்குடி | 7.03 | |
| 6.பெரியதாழை | தூத்துக்குடி | 4.76 | |
| 7.எண்ணூர் முகத்துவாரக்குப்பம் | திருவள்ளூர் | 5.45 | பணி நடைபெற்று வருகிறது. |
| 8.அண்ணாமலைச்சேரி | திருவள்ளூர் | 4.72 | மத்திய அரசின் தேசிய பறவை சரணாலய வாரியத்தின் ஒப்புதல் பெற்ற பின், பணி தொடரப்படும். |
| 9.பெரியமாங்கோடு | திருவள்ளூர் | 4.72 | |
| 10.உவரி | திருநெல்வேலி | 4.04 | கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | பின் பணிகள் துவங்கப்படும். |

## 6.19 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் நிர்வாக அலுவலக கட்டிடம் கட்டுதல்

சென்னையில், சேத்துப்பட்டில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்கு நிர்வாக அலுவலகக் கட்டிடம் ரூ.6 கோடி மதிப்பில் கட்டிட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணியை துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6.20 தடையற்ற தகவல் தொடர்பு சாதனம்

மீன்பிடி படகுகளுக்கு தடையற்ற தகவல் தொடர்பு ஏற்படுத்திடும் பொருட்டு, தமிழ்நாடு மின்னனு நிறுவனமான “எல்காட், சென்னை மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக ரூ7.73 கோடி செலவில் செயல்படுத்த அரசு முயற்சி மேற்கொண்டது. இத்திட்டத்தின் கீழ், பாம்பன், தொண்டி மற்றும் சின்ன ஏர்வாடி ஆகிய மூன்று இடங்களில் அடிப்படை தகவல் நிலையங்கள் மற்றும் உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 3,100 VHF கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. 71 நாட்டுப்படகு மீனவர்களுக்கு, கம்பியில்லா தொலைத் தொடர்பு திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல் பிரிவிடமிருந்து பயன்படுத்தும் உரிமம் பெறப்பட்டு VHF கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதர நாட்டுப் படகுகளுக்கு பயன்படுத்தும் உரிமம் பெற்ற பின் மீதமுள்ள VHF கருவிகள் வழங்கப்படும்.

## 6.21 தமிழ்நாட்டில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்தல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் தரத்தேவையை பூர்த்தி செய்திடவும், மீன்பிடித்தலுக்குப்பின் சுகாதாரமாக கையாளும் முறைகளை கடைப்பிடித்திடவும், தமிழக அரசு 13 கடலோர நகரங்களில் மீன்பதனிடும் பூங்காக்களை படிப்படியாக அரசு–தனியார் பங்களிப்புடன் (PPP) அமைத்திட உத்தேசித்துள்ளது. இவைகள் மீனவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிட உதவும். முதற்கட்டமாக, கடலூார் மற்றும் நாகப்பட்டினத்தில் மீன்பதனிடும் பூங்காக்கள் நிறுவப்படும். சென்னை “திருவாளர்கள் மஉறிந்திரா கன்சல்டிங் எஞ்சினியர்ஸ் லிமிடெட்” நிறுவனம், , செய்யத்தக்கமைக்கான ஆய்வினை மேற்கொள்ள, பரிவர்த்தனை சேவையை வழங்கிடும் ஆலோசகராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்நிறுவனம், மேற்கூறிய இரண்டு மாவட்டங்களில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்திட தொழில்நுட்ப, பொருளாதார செய்யத்தக்கமைக்கான ஆய்வினை நடத்தி அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஆய்வின்படி, முதற்கட்டமாக இத்திட்டம் கடலூரில் பெரியகங்கணாங்குப்பம் கிராமத்தில் 1.94 ஏக்கர் பரப்பில் சுமார் ரூ.14 கோடி செலவிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகூர் கிராமத்தில் 2.19 ஏக்கர் பரப்பில் தோராயமாக ரூ.23 கோடி செலவிலும் செயல்படுத்தப்படும். மீன்பதனிடும் பூங்காக்களை நிறுவிடவும், செயல்படுத்திடவும் விருப்பத்தினை தெரிவிக்கும் (Expression of Interest) தனியார் நிறுவனங்கள், தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு 2012–ல் ஆணையிட்டதனடிப்படையிலும், 2013ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில்

அறிவிக்கப்பட்டதற்கிணங்கவும், இரண்டாம் கட்டமாக **2013–14** ஆம் ஆண்டில், திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படும்.

### உ. மீன்வள ஆதாரங்கள் / உற்பத்தியை அதிகரித்தல்

## 6.22 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

சமீபகாலங்களில், அண்மைக்கடல் பகுதிகளில் அதிகளவு மீன்பிடிப்பின் காரணமாக மீன்வளம் அளவிற்கதிகமாக பிடிக்கப்பட்டு வருகிறது. மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடல்வள மேலாண்மையின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 1983. அமலாக்கப்பட்டுவருகிறது. மீன்வளத்தினைப் பாதுகாத்து அதிகரித்திட கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவைகள் சில வழிமுறைகளாகும்.

## 6.23 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்

கடல் சுற்றுச்சூழலில் மீன் உற்பத்தித்திறனை அதிகரிக்க, செயற்கை மீன் உறைவிடங்கள் உதவுகின்றன. இவைகள், கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர்வாழவும் வாய்ப்பளிப்பதால் மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள் அண்மைக்கடல் பகுதியில் இழுவலைகளைப் பயன்படுத்த தடையாகவும் அமைகிறது. அண்மைக்கடல் பகுதியில், மீன் பாதுகாப்பு நடவடிக்கையாக செயற்கை மீன் உறைவிடங்களை அமைப்பதற்காக அரசால்

நடவடிக்கை எடுக்கப்பட்டு, தமிழக அண்மைக் கடற்பகுதிகளின் 18 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணி, கொச்சி, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின்(CMFRI) தொழில்நுட்ப ஆலோசனையுடன் செயல்படுத்தப்பட்டது. மேலும், கீழ்க்கண்ட 19 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்திட அரசால் ரூ.2.93 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**அட்டவணை .6 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்படவுள்ள இடங்கள்**

| வ.எண். | கிராமம் | மாவட்டம் |
|---|---|---|
| 18. | முத்துநகர் | |
| 19 | அமலிநகர் | தூத்துக்குடி |
| 1 | ஆரங்கம் குப்பம் | |
| 2 | நெட்டுக்குப்பம் | திருவள்ளூர் |
| 3 | கத்திவாக்கம் சின்னகுப்பம் | |
| 4 | கானத்தூர் | |
| 5 | செம்மஞ்சேரி | |
| 6 | மகாபலிபுரம் | |
| 7 | கடலூர் சின்னகுப்பம் | காஞ்சிபுரம் |
| 8 | முதலியார்குப்பம் | |
| 9 | நெம்மேலிகுப்பம் | |
| 10 | புதுக்குப்பம் | கடலூர் |
| 11 | பில்லுமேடு | |
| 12 | சின்னாங்குடி | |
| 13 | பெருமாள்பேட்டை | |
| 14 | நாகூர் | நாகப்பட்டினம் |
| 15 | செருதூர் | |
| 16 | வெள்ளப்பள்ளம் | |
| 17 | கட்டுமாவடி | புதுக்கோட்டை |

## 6.24 புதிய சூரை மீன் பிடி விசைப்படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

ஆழ்கடலில் பிடிக்கப்படாமலிருக்கும் / குறைவாக பிடிக்கப்படும் மீன்வளங்களை பயன்படுத்திடவும், மீனவர்கள் மாற்றுமுறை மீன்பிடிப்பு மேற்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டும், சூரை மீன் பிடிப்பிற்கு விசைப்படகுகளை மாற்றுதல்/ இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளை புதியதாக வாங்குதல்/ தரம் உயர்த்துதலுக்கு 25 விழுக்காடு மானியமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கும் திட்டத்தினை இந்த அரசு அறிமுகப்படுத்தியது. மேலும், இத்திட்டத்தினை படிப்படியாக ஐந்தாண்டுகளில் செயல்படுத்திட ரூ.25 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 149 பயனாளிகளுக்கு சூரை மீன் பிடிப்பிற்கு ஏதுவாக மீன்பிடி படகுகளை மாற்றுதலுக்கு / புதிய படகு வாங்கிட / தரம் உயர்த்திட ரூ. 3.44 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதற்காக புதிய ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகள் வாங்குவதற்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் மானிய உதவியினை 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தி, இத்திட்டத்திற்கென ரூ.**30** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 2013-14ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள். இதன்படி ஒரு மீன்பிடி விசைப்படகிற்கு, ரூ.**60** இலட்சம் மதிப்பீட்டில் **50** விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ரூ.**30** இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

## 6.25 ஆழ்கடல் மீன்பிடிப்பு – தாய்க்கப்பல் கோட்பாடு

“ஆழ் கடல் மீன்பதனிடும் அலகு மற்றும் தாய்க்கப்பலினை” அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் நிறுவிடும் புதிய முன்னோடித் திட்டத்தினை அரசு அறிவித்தது. இத்திட்டம் அண்மைக்கடல் பகுதியில் மீன்பிடி அழுத்தத்தை குறைப்பதுடன், தமிழக மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பை மேற்கொள்ள உதவும். இத்தாய்க்கப்பல், ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள விசைப்படகுகளுக்கு அவசியமான இடுபொருட்களை வழங்குவதுடன், கப்பலிலேயே மீன்களை பதனிடும் அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும். மேலும், இக்கப்பல் மதிப்பூட்டிய மீன்பொருட்களின் ஏற்றுமதி செய்யும் மையமாக செயல்படுவதுடன் ஏற்றுமதி தரத்தேவையையும் உறுதிசெய்வதன் மூலம் மீனவர்களுக்கு அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையை பெற்றுத்தரும். இத்திட்டத்தின் கீழ் இந்திய பெருங்கடலில் ஒரு தாய்க்கப்பலும், வங்கக்கடலில் மற்றொரு கப்பலும் ஆக இரண்டு தாய்க் கப்பல்கள் நிறுத்தப்படும். இத்திட்டத்தினை செய்யத்தக்கமைக்கான ஆய்வினை மேற்கொள்ளவும், பரிவர்த்தனை ஆலோசனை சேவையை வழங்கிடவும் “திருவாளர்கள் மஉறிந்திரா கன்சல்டிங் எஞ்சினியர்ஸ் லிமிடெட் நிறுவனம்” தேர்வு செய்யப்பட்டு ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆய்வு முடிவுற்றபின், ஆழ்கடல் மீன்பதனிடும் அலகு மற்றும் தாய்க்கப்பலை தமிழகத்தில் நிறுவி இயக்கிட தகுதி வாய்ந்த தனியார் தேர்வு செய்யப்படுவார்.

## 7. உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வளத்தினை அதிகளவில் பெருக்கும் வாய்ப்புகள் கொண்ட சுமார் 3.75 இலட்சம் ஹெக்டேர் நீர் பரப்பில் பல்வேறு வகை நீர் நிலைகளான குளம் மற்றும் குட்டைகள், ஆறுகள் மற்றும்

பாசனக் கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகள் ஆகியவை அமைந்துள்ளன. ஆயினும், குறைந்த மற்றும் காலம் கடந்த பருவ மழை, நீர் நிலைகளில் குறுகிய கால நீர் இருப்பு, போதுமான உட்கட்டமைப்பு வசதியின்மையால் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் தீவன தயாரிப்பில் தன்நிறைவு அடையாமை மற்றும் போதிய விற்பனை உட்கட்டமைப்பு வசதியில்லாமை போன்றவைகள் உள்நாட்டு மீன் உற்பத்தியை கட்டுப்படுத்தும் காரணிகளாக உள்ளன. இத்தகைய இடர்பாடுகளை எதிர் கொள்வதற்கு நன்கு வளரக்கூடிய பெருவிரலிகளை இருப்பு செய்தல், மிதவைக்கூண்டுகள் / அடைப்பான்களில் மீன்வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு, வருடம் முழுவதும் தரமான மீன் குஞ்சுகள் கிடைப்பதை உறுதிசெய்ய புதிய மீன் விதை வங்கிகளை உருவாக்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்தி மீன் உற்பத்தியை பெருக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7.1 நீர்த்தேக்க மீன்வளம்

நீர்த்தேக்க மீன்வளம் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகிறது. நீர்த்தேக்க மீன்வளம், நீர்த்தேக்கங்களில் இயற்கையாகவே உள்ள மீன்கள் மற்றும் இருப்பு செய்யப்பட்ட மீன்வளம் ஆகிய மீன்வளங்களை உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டில் 53 நீர்த்தேக்கங்களில், மீன்வளத்துறை மீன்வள மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 8 நீர்த்தேக்கங்கள் உள்ளன. நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்பிடிப்பு மூன்று வகையான முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது. அவைகள் முறையே, உரிமச்சீட்டு வழங்குதல், பங்கு மீன்பிடிப்பு மற்றும் மீன்வளத்தினை குத்தகைக்கு விடுதலாகும். இந்நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்யப்படுகின்றன. மீன்வளத்தினை அதிகரித்திடும் நோக்கத்துடன் ஐதராபாத்திலுள்ள, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 80-100 மி.மீ. அளவுள்ள

பெருவிரலிகளை இருப்பு செய்திட நிதியுதவி அளிக்கிறது. 2012-13-ஆம் ஆண்டில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திடமிருந்து ரூ.51.76 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, முதற்கட்டமாக 31.64 இலட்சம் பெருவிரலிகள் 8 நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்பட்டுள்ளது. பிற நீர்நிலைகளில் மழைநீர் வரப்பெற்றவுடன் எஞ்சிய மீன் விரலிகள் இருப்பு செய்யப்படும். இந்நீர்த்தேக்க மீன் உற்பத்தியினை சீரான முறையில் நிர்வகித்திடும் நோக்கில் 53 நீர்த்தேக்கங்களை மீன்வள குத்தகைக்கு விட தமிழக அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மீன் குத்தகைதாரர் இந்நீர்நிலைகளைச் சார்ந்த பாரம்பரிய மீனவர்கள் மற்றும் பங்கு மீன்பிடிப்பு செய்யும் மீனவர்களைக் கொண்டே மீன்பிடித்திட வேண்டும் என்ற அடிப்படையில் நீர்த்தேக்க மீன்வளம் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இம்மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதுடன் மீன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 7 நீர்த்தேக்கங்கள் ரூ.2.44 கோடிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

## 7.2 மீன் குஞ்சு உற்பத்தி / மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள்

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கரந்தை ஆகிய 4 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2012-13-ஆம் ஆண்டில், 189 மில்லியன் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில், 28 இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 5 மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் உள்ளன. மீன்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மீன் விதைப்பண்ணைகளின் மொத்த பரப்பளவான 48.80 ஹெக்டேரில் 33.37 ஹெக்டேர் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு வளர்த்தெடுப்பு மையங்களில் இருந்து **2012–13–**ஆம் ஆண்டில், 102 இலட்சம் இளம்மீன்குஞ்சுகள், 77 இலட்சம் விரலிகள் மற்றும் 122 இலட்சம் பெருவிரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் போன்ற திட்டங்களிலிருந்து நிதியுதவி பெற்று பழுதடைந்த நிலையில் உள்ள மீன் விதைப்பண்ணைகளை சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 7.3 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாட்டில், உள்நாட்டு மீன்வளர்ப்பு செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி, கிராமப்புற வேலை வாய்ப்புகளை உருவாக்கிட அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் 12 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் மீன்வளர்ப்பில் ஈடுபடுத்த மானியத்துடன் தொழில்நுட்ப பயிற்சியும் வழங்கி, மீன்வளர்ப்போரை ஊக்குவித்தலே மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் முக்கிய பணிகளாகும். இத்திட்டம், 2013-14ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.4 உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில் உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேற்கொள்ள 56,000 ஹெக்டேர் நீர் பரப்புள்ள உவர்நீர்ப்பகுதிகள் உகந்ததாக அமைந்துள்ளன. மொத்தம், 2,748 இறால் வளர்ப்புப் பண்ணைகள் 6,019 ஹெக்டேர் நீர் பரப்பில் இறால் வளர்ப்பு மேற்கொண்டு வருகின்றது. இறால் பண்ணைகளை கடலோர நீர்வாழ் வளர்ப்பு ஆணையத்திடம் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும். இதுவரை, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடம் 4,432 ஹெக்டேர் உவர்நீர் பரப்பளவு கொண்ட 1,631 பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்த மற்றும் நீடித்த நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்க திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு உவர்நீர்வாழ் உயிரினவளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வாணியன்சாவடி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஏரிப்புரக்கரை ஆகிய இரு இடங்களில் இயங்கி வரும் அரசு உவர்நீர் பண்ணைகளில் குறிப்பிட்ட நோய்கிருமிகளற்ற வெள்ளை கால் இறால் “வெனாமி” வளர்ப்பை மேற்கொள்ள ரூ.1.40 கோடி செலவில் உயிரிபாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.5 குளிர்நீர் (Cold Water) மீன்வளத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அமைந்துள்ள உயர்மட்ட நீரோடைகள், பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய “சுற்றுலா மீன்வளமாக” மேம்படுத்த உகந்த இடமாக திகழ்கிறது. நீலகிரி மாவட்டத்தின் ‘அவலாஞ்சி’யிலுள்ள ‘ட்ரௌட்’ (Trout) மீன்குஞ்சு பொறிப்பகம் முக்கிய குளிர்நீர் மீன்வள மையமாக செயல்பட்டு வருகிறது. ‘ட்ரௌட்’ மீன்களின் வளத்தினை

அதிகரிக்கும் நோக்கில் அவலாஞ்சியிலுள்ள மீன்குஞ்சு பொறிப்பகத்தில் வளர்த்தெடுக்கப்படும் 'ட்ரௌட்' விரலிகள் அப்பகுதியில் உள்ள குளிர் நீரோடைகளில் ஆண்டு தோறும் இருப்பு செய்யப்படுகின்றன. நீலகிரி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் சில பகுதிகளில் காணப்படும் உயர்மட்ட குளிர் நீரோடைகளில் மீன்வளத்தினை பெருக்குவதற்காக இந்த மீன்குஞ்சு பொறிப்பகம் செயல்பட்டு வருகிறது. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன், 'அவலாஞ்சி'யிலுள்ள 'ட்ரௌட்' மீன்குஞ்சு பொறிப்பகத்தை ரூ.30 இலட்சம் செலவில் அரசு மேம்படுத்தி வருகிறது.

### 7.6 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள நீர்நிலைகளின் பாதுகாப்பு மற்றும் நீர்வடிகால் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2012-13ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிபாறை மற்றும் சித்தார் அரசு மீன்குஞ்சு பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.70.13 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8. ஆராய்ச்சி

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் இரு ஆராய்ச்சி நிலையங்கள் மண், நீர் மற்றும் மீன் மாதிரிகளை பகுப்பாய்வு செய்திடும் ஆய்வக வசதிகளுடன் இயங்கி வருகின்றன. புவனேஸ்வரத்திலுள்ள மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (CIFA), சென்னையிலுள்ள, மத்திய உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (CIBA), கொச்சியிலுள்ள மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி நிலையம் (CMFRI), நாகப்பட்டினத்திலுள்ள மீன்வளப்பல்கலைக்கழகம்

மற்றும் பிற மத்திய அரசு நிறுவனங்களுடன் மீன்வளத்துறை ஒருங்கிணைந்து, தொழில்நுட்பங்களை ஆய்வகங்களிலிருந்து மீனவர்களுக்கும் மீன்வளர்ப்போருக்கும் கொண்டு செல்கிறது.

சென்னை சேத்துப்பட்டில், அனைத்து வசதிகளுடன் கூடிய மீன்நோய் கண்டறியும் ஆய்வகம் மற்றும் வண்ண மீன்களுக்கான உயிர் உணவு வளர்ப்பு அலகு ரூ. 1.25 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் (NADP) கீழ் நிறுவப்பட்டு வருகிறது. இது, மாநிலத்தின் மீன் வளர்ப்போர் மற்றும் வண்ண மீன்வளர்ப்போரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

## 9. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

விரிவாக்கம் மற்றும் பயிற்சியானது, தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் பற்றி பயனாளிகள் தெரிந்து கொள்ளும் வகையில் முக்கிய பங்காற்றுகிறது. துறையின் ஐந்து பிரச்சார ஊர்திகள் பல்வேறு மீனவ கிராமங்கள் மற்றும் உள்நாட்டு மீன்வளப்பகுதிகளில் விழிப்புணர்வு முகாம்களை நடத்திட பிரத்தியேகமாக இயக்கப்படுகின்றன. மேலும் கண்காட்சி, வர்த்தக பொருட்காட்சி மற்றும் உழவர்பெருவிழா போன்றவற்றில் பங்கேற்பதன் மூலம் மீன்வளத்துறை, மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு பல்வேறு தொழில்நுட்பங்களை கொண்டு செல்லும் விரிவாக்கப்பணிகளை மேற்கொள்கிறது. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (NADP), தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மற்றும் மத்திய அரசு ஆகியவைகளின் நிதி உதவியுடன், தேவை அடிப்படையில் பல்வேறு பயிற்சிகள் மீன்வளத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றது.

### 9.1 மீனவ இளைஞர்களுக்கு கடற்சார் கல்வி

மீனவ இளைஞர்களின் திறனை மேம்பாடடையச் செய்வதன் மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்கிட, அரசால் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட **6** கடற்சார் கல்வி பாடப்பிரிவுகளை பயின்றிட, மீன்பிடித் தொழிலிலுள்ள மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, ஒருவருக்கு ரூ.50,000/– வரை நிதியுதவி வழங்குகிறது. இதற்காக, ரூ.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 88 மீனவ இளைஞர்களுக்கு ரூ.41.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 9.2 தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, மீன்வளம் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழில்நுட்ப மனிதவளத்தினை உருவாக்கிட, நாகப்பட்டினத்தில் மீன்வள பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கென, ரூ.**18.10** கோடி ஒப்பளிக்கப்பட்டு, **2012–13**ஆம் ஆண்டிற்கு ரூ.**8** கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் அமைத்திட நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணங்குடி - நாகூர் (முட்டம்) கிராமங்களில் **90** ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் ஒன்றும் நாகப்பட்டினத்தில் ஒன்றுமாக இரண்டு புதிய மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவிட, ஒவ்வொரு நிலையத்திற்கும் ஐந்தாண்டுகளுக்கு ரூ.34.08 கோடி ஒப்பளிக்கப்பட்டு, **2012–13**ஆம் ஆண்டிற்கு

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் அரசு தலா ரூ.7 கோடியை விடுவித்துள்ளது. தற்பொழுது இரண்டு நிலையங்களும் இயங்கத் துவங்கி சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகின்றன. இம்முயற்சி, தமிழகத்தின் மீன்வளம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் மனிதவளத்தினை மேம்பாடடையச் செய்யும்.

## 9.3 மீன்வளத் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்

மீன்வளத்தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம், மீனவர்களுக்கு தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி அளிக்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. இது வரை 3,607 மீனவர்களுக்கு கடல்பாசி வளர்ப்பு, நண்டு கொழுக்க வைத்தல், சுகாதார முறையில் மீன்களைக் கையாளுதல், இயந்திரப் படகு பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல், சூரை மீன் பிடிப்பு, கடல் வண்ண மீன் வளர்ப்பு, கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்பு ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

முன்னோடி திட்டமாக, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.3.34 கோடி செலவில் நன்னீர் நீர்நிலைகளில் கூண்டுகளில் மீன் வளர்க்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்த்தேக்கம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியாரில் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் பட்சத்தில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் நிதியை பயன்படுத்தி, மேலும் விரிவுபடுத்தப்படும்.

## 9.4 சென்னையில் மீன் திருவிழா நடத்துதல்

2012-13ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க தேசிய அளவிலான மீன் திருவிழா, சென்னையில் ரூபாய் ஒரு கோடி செலவில் ஐதராபாத்திலுள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB), தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (TNFDC) மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (TAFCOFED) ஆகியவற்றுடன் இணைந்து தமிழக அரசு மீன் திருவிழாவை நடத்தவுள்ளது. இத்திருவிழாவினை முதன்முறையாக மாநிலத்தில் நடத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது.

இந்த மீன் திருவிழா, சென்னை தீவுத்திடலில் 2013ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை 4 நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது. இத்திருவிழாவில், பல்வேறு வகையான வண்ண மீன்கள் ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்படும். பார்வைக்கு வைக்கப்படவிருக்கும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்குத் தேவையான இடுபொருட்கள், நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான கருவிகள், மீன்பிடிப்பு மற்றும் மீன்பதனிடும் கருவிகள் போன்றவை மீன்வள ஆர்வலர்களுக்கு தகவல் அளிப்பவைகளாகத் திகழும். நன்னீர் மற்றும் கடல் மீன் காட்சியகங்களும், வண்ண மீன் வளர்ப்போருக்கான போட்டிகளும், மீன்கள் மற்றும் மீன் உணவு விற்பனையுடன், மீன் உணவு சமையல் போட்டிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இந்த மீன்திருவிழாவில் கலந்து கொள்ளும் மக்களுக்கு சிறப்பான அனுபவமாக அமைவதுடன், மீன்கள், கடல் உணவுகள் மற்றும் அவற்றின் மருத்துவ குணங்கள் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். மேலும், இத்திருவிழா பொது மக்களுக்கு மீன்வளம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மீன்வளத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு பெருமளவில் உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 10. சிறப்புத் திட்டங்கள்

### 10.1 கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric card) அடையாளஅட்டை வழங்குதல்

26/11 மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், கடலோர பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric card) அடையாள அட்டைகளை வழங்குவதற்காக மத்திய அரசின் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1.16 கோடி நிதி தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. "பயோமெட்ரிக்" அடையாள அட்டைகள் தீவிர மீன்பிடிப்பில் ஈடுபடும் **1.85** இலட்சம் கடல் மீனவர்களுக்கு வழங்கப்படும். பெங்களூரிலுள்ள 'பாரத் மின்னனு லிமிடெடிடம்,' பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது முதற்கட்டமாக **1,19,990** அடையாள அட்டைகள் பெறப்பட்டு, **1,05,500** அடையாள அட்டைகள் கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மீதமுள்ள மீனவர்கள் குறித்த விவரங்கள் பதிவு செய்யும் பணியும் மற்றும் பயோமெட்ரிக் விவரங்கள் பதிவு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

### 10.2 மீன்பிடி கலன்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்

மத்திய அரசால் கடலோர பாதுகாப்பினை உறுதிசெய்திடும்பொருட்டு மற்றுமொரு திட்டமான மீன்பிடிகலன்களை இணையதளத்தின் மூலம் பதிவு செய்திடுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கணினி / மென்பொருளை புதுடெல்லியுள்ள, தேசிய தகவல் மையம் மூலம் தமிழக அரசுக்கு மத்திய அரசு ரூ.70.509 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் இணையதளம் மூலம் மீன்பிடி கலன்களை பதிவு செய்திட மத்திய அரசு, ரூ.62.85 இலட்சம் நிதி கூடுதலாக வழங்கியுள்ளது. 5,600 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 27,426 இயந்திரமயமாக்கப்பட்ட மற்றும் இயந்திரத்துடன் இல்லாத நாட்டுப்படகுகள் இணையதளம் மூலம் நாளதுதேதிவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 10.3 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (TN IAMWARM)

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், தேர்வு செய்யப்பட்ட உபவடி நில பகுதிகளில் நீர்வரத்தின் அளவினை மேம்படுத்தவும் மற்றும் நீரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்வதும் முதன்மையான நோக்கமாகும். நீர் நிலைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்திட தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு இருப்பு செய்யப்படுகின்றன. பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்த்தல், மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல், மீன்விதை வங்கிகள் அமைத்தல், அரசு மீன்விதைப் பண்ணைகளை சீரமைத்தல், மிதவைக் கூடுகளில் மீன் வளர்ப்பு, வண்ண மீன்வளர்ப்பை ஊக்குவித்தல், மற்றும் மீன் விற்பனைக்காக மீன் அங்காடிகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் மீன்வளத்துறையினால் செயல்படுத்தப்படுகின்றன.

2012-13–ஆம் ஆண்டில் 14 மாவட்டங்களிலுள்ள 40 உபவடி நிலப்பகுதிகளில் பல்வேறு மீன்வள மேம்பாட்டு திட்டங்கள், ரூ.6.21 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், 2013-14ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 10.4 தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் (NADP) 2012-13

2012-13 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட திட்டங்கள் ரூ.20.81 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 10.4.1 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளில் பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புதிய மீன்பண்ணைகள் அமைத்தல் (ரூ.15.02 கோடி)

பவானிசாகர், மேட்டூர் அணை, கிருஷ்ணகிரி மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு ஆகிய இடங்களில் அமைந்துள்ள மீன் பண்ணைகளைப் புதுப்பிக்க அரசு, ரூ.13.38 கோடி ஒப்பளித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தில் உள்ள ஆத்தூரில் ரூ.1.64 கோடி செலவில் புதிய மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கூறிய நடவடிக்கைகள் மூலம் மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்திக்கான இடைவெளியை குறைத்திடவியலும்.

### 10.4.2 பெருநகரங்கள் மற்றும் நகரங்களில் நவீன நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளை இயக்குதல் (ரூ.90.90 இலட்சம்)

நுகர்வோருக்கு சுகாதாரமான முறையில் புரதம் நிறைந்த மீன்கள் கிடைப்பதை உறுதிபடுத்திடும் வகையில்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினால் ரூ.90.90 இலட்சம் செலவில் 10 நவீன நடமாடும் மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் ஒரு நடமாடும் கடல் மீன் உணவகமும் இயக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது.

### 10.4.3 மேற்கு கடற்கரை பகுதிகளில் கனவாய் மீன்கள் பிடிக்க ஏதுவாக படகுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மானியம் அளித்தல் (ரூ.41.41 இலட்சம்)

தமிழக கடற்கரை முழுவதும் இந்திய ‘கனவாய்’ மீன்கள் (*L.duvauceli*) கிடைக்கப்பெற்றாலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையில் இவைகள் மிகுதியாக பிடிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம், மீனவர்கள் கையாளும் மீன்பிடி முறையில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, மீனவர்கள் ‘கனவாய்’ மீன்பிடிப்பு சாதனங்களை வாங்கிட 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ஒரு அலகிற்கு ரூ.25,000/–வீதம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக, இதுவரை 160 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். படகுகளில் மீன்பிடிப்பு சாதனங்கள் பொருத்தும் பணி நடைபெற்று விரைவில் மானியத் தொகை விடுவிக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.41.41 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

### 10.4.4 வெள்ளைக்கால் இறால் (*L.vannamei)*

**வளர்ப்பினை ஊக்குவிக்க, அரசு உவர்நீர் மீன் பண்ணைகளை தரம் உயர்த்துதல் (ரூ.1.40 கோடி)**

வெள்ளைக்கால் இறால் "வெனாமி" வளர்ப்பின் விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வாணியஞ்சாவடி மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஏரிப்புரக்கரை அரசு உவர்நீர் மீன்பண்ணைகளில் உயிரி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, அவற்றை தரம் உயர்த்துதல் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 10.4.5 மீன்வளத்துறை அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி (ரூ.12.12 இலட்சம்)

இத்திட்டத்தின் கீழ் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு மீன்வளத்தில் நவீன தொழில்நுட்ப முறைகள், களப்பணிகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக ரூ.12.12 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகிறது. இதுவரையில் 129 மீன்துறை அலுவலர்கள் இப்பயிற்சியினை பெற்றுள்ளனர்.

### 10.4.6 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் மூலம் மீன் விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (ரூ.30.75 இலட்சம்)

மீனவ மகளிரின் ஆற்றலை அதிகரித்து அவர்களது மேம்பாட்டினை உறுதி செய்திட, சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், மீன் விற்பனை திறமையை மேம்படுத்தல், மீனவ கூட்டுறவு முறைகளை அறிதல் ஆகியவற்றில் மீனவ மகளிருக்கு பயிற்சி அளிக்க உத்தேசித்து

இதற்கென அரசு ரூ.30.75 இலட்சம் செலவில் விரிவாக்கப் பயிற்சி, மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன்பதப்படுத்தும் இடங்கள் ஆகிய இடங்களை நேரில் கண்டு அவற்றின் செயல்பாடுகளை அறிதல் மற்றும் மீன் அங்காடி மற்றும் நடமாடும் மீன்விற்பனை ஊர்தி மூலம் மீன்கள் விற்பனை செய்திடல் ஆகிய பணிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு மீன் அங்காடி அமைக்கப்பட்டு வருகிறது. மீனவ மகளிருக்கு தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 10.4.7 சென்னை சேத்துப்பட்டில் வண்ண மீன்களுக்கான உயிர் உணவு வளர்ப்பு அலகு மற்றும் மீன் நோய் கண்டறியும் ஆய்வகம் அமைத்தல் (ரூ.1.25 கோடி)

சென்னை சேத்துப்பட்டில் வண்ண மீன்களுக்கான உயிர் உணவு வளர்ப்பு அலகு மற்றும் மீன்நோய் கண்டறியும் ஆய்வகம் அமைக்க ரூ. 1.25 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. வண்ண மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வண்ண மீன்களின் நிறத்தினை அதிகரிக்க அவசியமான உயிர் உணவுகளான “இன்புசோரியா”, “டாஃப்னியா”, “மொய்னா” மற்றும் “உணவு புழுக்கள்” போன்றவை இந்த அலகில் உற்பத்திசெய்யப்படும். இந்த ஆய்வகத்திலுள்ள நவீன ஆய்வக கருவிகள் மீன்நோய் கண்டறிதல், நீரின் தரம் ஆராய்தல் மற்றும் மீன்உணவு பகுப்பாய்வு போன்ற வசதிகளுக்கு வழிவகுக்கும். இது மாநிலத்தின் வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கும், இறால் மற்றும் மீன்வளர்ப்போருக்கும் உதவியாக இருக்கும்.

### 10.4.8 மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளுக்கு இடுபொருள் செலவின மானியம் அளித்தல் (ரூ.50.50 இலட்சம்)

மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளுக்கு இடுபொருள் செலவுகளாகிய மீன்குஞ்சு மற்றும் மீன் உணவிற்கு, 50 விழுக்காடு மானியம் அளித்திடும் வகையில் மொத்தம் 100 ஹெக்டேர் பரப்பளவிற்கு, ரூ.50.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் தொடர்ந்து தரமான மீன்குஞ்சுகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 10.4.9 நவீன மீன் விற்பனை நிலையம் மற்றும் மீன் உணவகம் நிறுவுதல் (ரூ.89.08 இலட்சம்)

சுகாதாரமான முறையில் பதப்படுத்தப்பட்டு, சமைப்பதற்கு தயார்நிலையில் உள்ள மீன்கள் நுகர்வோருக்கு கிடைத்திட ஒரு நவீன மீன் அங்காடி மற்றும் மீன் உணவு பிரியர்களுக்கு நாவிற்கு ருசியான மீன் உணவினை அளித்திட ஒரு நவீன மீன் உணவகம், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு இணையம் (TAFCOFED) மூலம் செயல்படுத்திட ரூ.89.08 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரையில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## 10.5 தேசிய புரத இணை உணவு இயக்கம் (National Mission for Protein Supplement (NMPS))

### i நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்த்தல் (Cage Culture) (ரூ.7.08 கோடி)

நீர்த்தேக்கங்களில் மீன்வளத்தினை சீரான முறையில் நிர்வகித்து, மீன்வள ஆதாரத்தினை பயன்படுத்துதல் தற்பொழுது முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதற்கென நீர்த்தேக்கங்களில் மிதவைக்கூடுகள் அமைத்து மீன் வளர்க்க அரசு ரூ.7.08 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. திருவள்ளூர்,

காஞ்சிபுரம், தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள தகுதியான நீர்நிலைகளில் 28 மிதவை கூண்டுகள் கொண்ட ஒரு தொகுப்பு வீதம், நான்கு தொகுப்புகள் நிறுவப்படவுள்ளன. இதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**ii மீன்வளர்ப்போருக்கான ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பண்ணை அமைத்தல் (ரூ.2.50கோடி)**

மீன் வளர்ப்பிற்கு தேவையான மீன்குஞ்சு உற்பத்தி முதல், மீன் வளர்ப்பு மற்றும் மீன் அறுவடை வரையிலான உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரமான மீன் கையாளும் முறைகள் மற்றும் மீன் விற்பனை வசதிகள் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து நீர்வாழ் உயிரின வளர்ப்பினை பலப்படுத்தும் நோக்குடன், தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.2.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு அலகு நிறுவப்பட்டு வருகிறது.

## 10.6 தேசிய மீன் வளர்ச்சி மேம்பாட்டு வாரியம் (NFDB)

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திடமிருந்து கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்திட நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

### அ. மீன்பிடி துறைமுகம் / மீன் இறங்கு தளங்கள் தரம் உயர்த்துதல்.

தேசிய மீன் வளர்ச்சி மேம்பாட்டு வாரிய (NFDB) நிதி உதவி திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட மீன்பிடி துறைமுகம் / மீன்

இறங்குதளங்களை மேம்படுத்த / விரிவாக்கம் செய்ய / நவீனப்படுத்த அரசு, 2012-13ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.30.20 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

**i கடலூர் மீன்பிடி துறைமுகம்**

ரூ.10.35 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 45 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ii கடலூர் மாவட்டம் முடசலோடை மீன் இறங்குதளம்**

ரூ.7.78 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணியை துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**iii தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம்**

ரூ.12.05 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணியை துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆ. நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை**

நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்ய, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியுதவியுடன், 2012-13–ஆம் ஆண்டில் 8 நீர்த்தேக்கங்களில் பெருவிரலிகளை இருப்பு செய்ய ரூ.51.76 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**10.7 தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

**(NABARD)**

தமிழகத்தின் 12 இடங்களில் மீன் விதை பண்ணைகள் அமைக்கவும் 11 கடற்கரை கிராமங்களில் மீன் இறங்கு தளங்களை அமைக்கவும் 2012–13ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி மதிப்பில் "நபார்டு" (NABARD-RIDF) நிதியுதவித் திட்டத்தின் கீழ் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

### i) மீன் விதை பண்ணைகள்

ரூ.37.05 கோடி மதிப்பில் கீழ்க்காணும் 12 இடங்களில் மீன் விதை பண்ணை கட்டுமான பணிகள் துவங்கி பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை 7: மீன் விதை பண்ணைகள்**

*(ரூ. கோடியில்)*

| வ. எண். | இடம் | மாவட்டம் | தொகை |
|---|---|---|---|
| 1. | பவானிசாகர் (பூங்கர் மீன் பண்ணை) | ஈரோடு | 9.98 |
| 2. | பவானிசாகர் பழைய மீன் பண்ணை | ஈரோடு | 4.20 |
| 3. | மணிமுத்தாறு | திருநெல்வேலி | 12.70 |
| 4. | வீடூர் | விழுப்புரம் | 1.41 |
| 5. | தட்டாமனைப்பட்டி | புதுக்கோட்டை | 0.61 |
| 6. | நெய்தலூர் | தஞ்சாவூர் | 0.52 |
| 7. | தட்டான்குளம் | தஞ்சாவூர் | 1.01 |
| 8. | அகரப்பேட்டை | தஞ்சாவூர் | 1.42 |
| 9. | அசூர் | திருச்சி | 2.00 |
| 10. | லால்பேட்டை | கடலூர் | 1.68 |
| 11. | வாணியன்சாவடி | காஞ்சிபுரம் | 0.82 |
| 12. | திருக்காம்புலியூர் | கரூர் | 0.70 |

### ii) மீன் இறங்குதளங்கள்

ரூ.**62.95** கோடி மதிப்பில், கீழ்க்காணும் **11** இடங்களில் மீன் இறங்கு தளங்களில் கட்டுமான பணி துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை8 : மீன் இறங்குதளங்கள்**

*(ரூ. கோடியில்)*

| வ. எண். | இடம் | மாவட்டம் | தொகை |
|---|---|---|---|
| 1. | செருதூர் | நாகப்பட்டினம் | 7.41 |
| 2. | தேவிப்பட்டினம் | இராமநாதபுரம் | 4.02 |
| 3. | ரோச்மாநகர் | இராமநாதபுரம் | 3.33 |
| 4. | தருவைக்குளம் | தூத்துக்குடி | 16.26 |
| 5. | திரேஸ்புரம் | தூத்துக்குடி | 16.56 |
| 6. | இணயம்புத்தன்துறை | கன்னியாகுமரி | 2.40 |
| 7. | சைமன் காலனி | கன்னியாகுமரி | 2.73 |
| 8. | குரும்பனை | கன்னியாகுமரி | 2.04 |
| 9. | முத்துக்குடா | புதுக்கோட்டை | 2.77 |
| 10. | சாமியார்பேட்டை | கடலூர் | 2.50 |
| 11. | எம்.ஜி.ஆர் திட்டு | கடலூர் | 2.93 |

## 11. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்

மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கை தரத்தினை உயர்த்திட மீனவர் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்துறையில் மீனவர் / மீனவ மகளிருக்கு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் சென்றடைய மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இன்றியமையாதவையாகும். 1,402

தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு இணையங்கள் / தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 6.50 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 54 நியாய விலைக் கடைகள் மீனவர் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினர்களின் விவரம் கீழ்க்காணும் அட்டவணை 9–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9: மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| கூட்டுறவு சங்கங்கள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 574 | 3,40,033 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 445 | 2,16,378 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 303 | 84,732 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 68 | 8,157 |
| **மொத்த கூட்டுறவு சங்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அங்கத்தினர்** | **1390** | **6,49,300** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 11 | 896 |
| தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 612 |

## 12. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

தமிழகத்தில் மீன்பிடி மற்றும் அதனை சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் அனைத்து தொழிலாளர்களின் விரிவான சமூகப் பாதுகாப்பிற்கும், அவர்களது நலத்தினை

உறுதி செய்வதற்காகவும், மீனவர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டுஅதன் தலைமை அலுவலகம், சென்னை, நீலாங்கரையில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பின்வருமாறு:

**<u>அட்டவணை:10 தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் விபரம்</u>**

| வ. எண் | நிவாரணம் / உதவி |
|---|---|
| 1. | விபத்து (நிவாரணம்)<br>(அ) விபத்தினால் மரணம்<br>(ஆ) இரண்டு கைகள் இழப்பு<br>(இ) இரண்டு கால்கள் இழப்பு<br>(ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு<br>(உ) இரண்டு கண்களிலும் பார்வை இழப்பு<br>(ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு<br>(எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு இழப்பு |
| 2. | மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது விபத்து காரணமாக அல்லாமல் மீன்பிடிப்பிற்கு பின்னர் இறத்தல். |
| 3. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் |
| 4. | இயற்கை மரணம் |
| 5. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை |
| 6. | உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை |
| | (அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி |

| | |
|---|---|
| | (ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி |
| | (இ) தொழிற்பயிற்சி மற்றும் பல்நோக்கு பயிற்சி |
| | (ஈ) இளங்கலை பட்டப்படிப்பு |
| | (உ) முதுகலை பட்டப்படிப்பு |
| | (ஊ) சட்டம், பொறியியல், மருத்துவம் முதலியன. |
| | (எ) முதுநிலைதொழிற் கல்விகள் |
| 7. | திருமண உதவி |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி<br>ஆ) உறுப்பினரின் மகன் /மகள் திருமணம் |
| 8. | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை<br>(அ) மகப்பேறு<br>(ஆ) கருச்சிதைவு<br>(இ) கருக்கலைப்பு |
| 9. | முதியோர் ஓய்வூதியம் (65 வயதிற்குமேல்) |

- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் மொத்தம் 4.19 இலட்சம் மீனவர்/மீனவ மகளிர் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

- 9,211 கேட்பு விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை / நிவாரணத் தொகையாக **2012–13**ஆம் ஆண்டில், ரூ.**3.48** கோடி பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

- பயனாளிகளுக்கு நிவாரணம் / உதவித் தொகை, மின்னனு பண பரிமாற்றம் (ECS) மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

- கடலில் மீன்பிடிக்கையில் காணமல்போகும் / துப்பாக்கி சூட்டினால் இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள் உயர்கல்வி தொடர நிதியுதவி அளிப்பதற்கென ரூ.**25**

இலட்சம் தனி நிதி பிரத்தேயமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. பகுதி II திட்டம்

### i) 2012-13

2012-13–ஆம் ஆண்டில் பகுதி II திட்டங்களின் கீழ் ரூ.97.80 இலட்சம் செலவில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- மீன்வளத்துறையின் அலுவலகப் பயன்பாட்டிற்கு கழித்தொதுக்கப்பட்ட பழைய ஊர்திகளுக்குப் பதிலாக 10 புதிய ஊர்திகள் ரூ.61 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

- சென்னை மீன்வளத்துறையின் இயக்குநரகத்தில் உள்ள கூட்ட அரங்கு ரூ.15.25 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- அலுவலகத்திற்கு தேவையான கணினி, அச்சு இயந்திரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் ரூ.1.96 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

- அனைத்து மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் நகலெடுக்கும் கருவிகள் ரூ.13.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

➢ மணிமுத்தாறில் உள்ள பணியாளர் குடியிருப்புக்கு ரூ.**6.36** இலட்சம் செலவில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### ii) 2013-14

பகுதி–II திட்டத்தின் கீழ் 2013-14ஆம் ஆண்டிற்கு ரூ.42 இலட்சம் மதிப்பில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

**அட்டவனை 11: பகுதி–II திட்டங்கள் (2013-14)**

*(ரூ. இலட்சத்தில்)*

| வ. எண். | திட்டப்பணிகள் | தொகை |
|---|---|---|
| 1. | கடலூர் மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல். | 27.00 |
| 2. | இராமநாதபுரம் மீன்பிடி துறைமுக உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு மாற்று ஊர்தி (ஈப்பு) வழங்குதல். | 8.00 |
| 3. | மீன்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு அஞ்சல் முத்திரை பொறி (Franking) இயந்திரம் வாங்குதல் | 1.00 |
| 4. | தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983–ஐ அமல்படுத்தும் அலுவலர்களின் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் தீர்ப்பு அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களின் அலுவலகங்களுக்கு மின் சேமிப்பு கலன் வசதிகள் செய்தல். | 6.00 |
| **மொத்தம்** | | **42.00** |

## 14. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFPED)

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983ன்கீழ் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 06.11.1991 முதல் மீனவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திட இயங்கிவருகிறது. தற்போது 401 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 120 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 82 மீனவ மகளீர் கூட்டுறவு சங்கங்களும் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தில் ரூ.89.155 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தி உறுப்பினர்களாக இணைந்துள்ளார்கள்.

தற்போது விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் மீனவர்களுக்கு வழங்குவதற்காகவும் வருவாய் ஈட்டுவதற்காகவும் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை கீழ்க்காணும் இடங்களில் இணையம் நடத்தி வருகிறது.

**அட்டவணை 12– எரியெண்ணெய் விற்பனை நிலையங்களின் பட்டியல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | பழவேற்காடு |
| 2 | காஞ்சிபுரம் | நீலாங்கரை |
| 3 | கடலூர் | அன்னன்கோயில்<br>கடலூர் மீன்பிடித் துறைமுகம் |
| 4 | நாகப்பட்டினம் | நாகூர் |

| | | |
|---|---|---|
| 5 | தஞ்சாவூர் | சேதுபாவாசத்திரம் |
| 6 | தூத்துக்குடி | வேம்பார் |
| | | தருவைக்குளம் |
| 7 | கன்னியாகுமரி | சின்னமுட்டம் |
| 8 | இராமநாதபுரம் | கீழக்கரை<br>மண்டபம்<br>இராமேஸ்வரம் |

2012-13 ஆம் ஆண்டில், 15,693 கிலோ லிட்டர் வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 14.1 மானிய விலையில் விற்பனை வரி விலக்குடன் தொழிலக மண்ணெண்ணெய் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்குடன் மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய், 2012-13 ஆம் ஆண்டில், 3,312 கிலோ லிட்டர் இணையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 14.2 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்களை விற்பனை செய்தல்

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம், கடல் மீனவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் அளிக்கும் மானிய விலையில் உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ரூ.30,000/– அல்லது இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு, இதில் எது குறைவோ அத்தொகையை, ஒவ்வொரு மீனவருக்கும் மானியமாக வழங்கப்படுகிறது. 2012-13-ஆம் ஆண்டில்,

2,950 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 14.3 மீன் விற்பனை

நெய்வேலி அனல் மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் மீன் விற்பனை நிலையம் ஒன்று இணையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 16,520 கிலோ மீன்கள் 2012-13 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.1.19 கோடியில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீலாங்கரையிலும், வையாவூரிலும் தலா ஒரு நவீன மீன்விற்பனை நிலையமும், நீலாங்கரையில் நவீன மீன் உணவகம் நிறுவப்படவுள்ளன. காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இரு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த **20** மீனவ மகளிருக்கு வெளிமாநிலங்களுக்கு அழைத்துச் சென்று மீன் உபபொருட்கள் தயாரித்தல் மற்றும் மீன்விற்பனையில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு **2** நவீன நடமாடும் மீன்விற்பனை ஊர்திகள் வழங்கப்படவுள்ளது.

### 14.4 இதர சேவைகள்

கடல் மீனவர்களுக்குத் தேவையான இயந்திர உதிரி பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இஞ்சின் ஆயில் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சேதுபாவாசத்திரத்தில் சேவை மையம் ஒன்றினை நடத்தி வருகிறது.

## 15. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (TNFDC)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974–ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும் மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.45 கோடியாகும்.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக இயக்குநர்கள் தமிழக அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.
- தற்போது பல்வேறு நிலைகளில் 153 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வணிக ரீதியிலான மீன்வள மேம்பாட்டுப் பணிகளை இந்தியா மற்றும் இதர இடங்களில் உருவாக்கி, இயக்கி, மேம்படுத்தி, இப்பணிகளுக்குத் தேவையான நிதியுதவிதியினை நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வழங்கும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
    - நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை
    - மீன் குஞ்சு உற்பத்தி
    - மீன் விற்பனை மற்றும் மீன் உணவகம்
    - வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை
    - இறால் குஞ்சு பொறிப்பகம் மற்றும் இறால் பண்ணை
    - டீசல் / மண்ணெண்ணெய் மற்றும்

வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரம் விற்பனை

## 15.1 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள 8 நீர்த்தேக்கங்களில் அறிவியல் ரீதியில் முறையாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகிறது. உள்நாட்டு மீனவர் சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்டு மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மீன்பிடிப்பினை அதிகரித்து வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்திற்காக தற்போது 7 நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமையினை தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து 2012-13 ஆம் ஆண்டில் 833 டன் பல்வகை மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.2.65 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2013-14 ஆம் ஆண்டில், 1,070 டன் மீன்பிடிப்பு மேற்கொள்ளவும் ரூ.3.40 கோடி இலாபம் ஈட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 15.2 மீன் குஞ்சு உற்பத்தி

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் பண்ணைகளில் சுமார் 3.79 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர் பரப்பில் மீன் குஞ்சு வளர்ப்பிடம் உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன் மீன்வளத்துறைக்கும் மீன் வளர்ப்போருக்கும் வழங்கப்படுகின்றன.

2012-13ஆம் ஆண்டில் 225 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 29.72 இலட்சம் பெருவிரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.35.59 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2013-14 ஆம் ஆண்டில், நுண்மீன் குஞ்சுகள் இலக்கு 270 இலட்சங்களாகவும், பெருவிரலிகள் 52 இலட்சம் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 15.3 மீன் விற்பனை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலை சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் விற்பனை செய்து வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில் 970 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ.63.62 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2013-14 ஆம் ஆண்டில், 1,260 டன் மீன் விற்பனை மேற்கொண்டு, ரூ.95 இலட்சம் இலாபம் ஈட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சென்னை, கோவை மற்றும் திருப்பூரில் நவீன மீன் உணவகங்களையும் நடத்தி வருகிறது.

மேலும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் நவீன நடமாடும் மீன் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது.

## 15.4 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம், கடலோரப் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் தற்போது 30 எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவி, இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு

மானியத்துடன் கூடிய எரியெண்ணெய் வழங்கி வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில் 86,893 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.6.13 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும் 2013-14 ஆம் ஆண்டில், 93,089 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யவும் ரூ.7 கோடி இலாபம் ஈட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.5 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில் 5,912 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு 25.87 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2013-14 ஆம் ஆண்டிற்கு 6,900 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யவும் 30 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 15.6 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு வெளிபொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்களை விநியோகித்தல்

மத்திய அரசு பங்களிப்பு நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்க மானியத்துடன் கூடிய வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2012-13ஆம் ஆண்டில், 250 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகம் செய்யப்பட்டு ரூ.10 இலட்சம்

இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2013–14ஆம் ஆண்டுக்கு 500 வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் விநியோகம் செய்து ரூ.20 இலட்சம் இலாபம் ஈட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 15.7 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி பண்ணைகளும் சென்னை, ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகரில் வண்ணமீன் விற்பனையுடன்கூடிய வண்ணமீன் காட்சியகங்களையும் நிறுவி இயக்கி வருகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தனியார் பெரு வணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் நன்னீர் மற்றும் கடல் மீன் காட்சியகங்களை அமைத்துக் கொடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் சாதாரண வாடிக்கையாளர்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை வண்ணமீன் வளர்ப்பு பொழுது போக்கினை மேற்கொள்ள தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஊக்குவிக்கிறது.

## 15.8 குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கீழ்காணும் கட்டமைப்பு வசதிகளை மீன் ஏற்றுமதியாளர்கள் / மீன் வளர்ப்போருக்கு 2012-13 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கியுள்ளது:

- இக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மண்டபம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மீன் பதனிடும் வசதிகளை ரூ.11.95 இலட்சத்திற்கு தனியார் கடல் பொருள் ஏற்றுமதியாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

- நீலாங்கரையிலுள்ள இறால் குஞ்சு பொறிப்பக வசதிகள், ''ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்திற்கு'' வெனாமி (*L.vannamei*) வகை சினை இறால்களை இறக்குமதி செய்து நோய் தொற்று இல்லை என்று உறுதி செய்யும் கூடமாக பயன்படுத்திட ரூ.4.65 இலட்சத்திற்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு மாதிரி இறால் பண்ணை தனியாருக்கு ரூ.6.13 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## 15.9 இதர திட்டங்கள்

கீழ்காணும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

### 15.9.1. கோயம்புத்தூர் உக்கடத்தில் உள்ள மொத்த மீன் விற்பனைச் சந்தையை நவீனமயமாக்குதல்

கோயம்புத்தூர் உக்கடத்தில் உள்ள மொத்த மீன் விற்பனைச் சந்தையை ஐதாராபாத்திலுள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ.2.25 கோடியில் குளிர்கிட்டங்கி, பனிக்கட்டி நிலையம் மற்றும் கழிவுகளை வெளியேற்றும் வசதிகளுடன் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டு, இப்பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி மூலமாக செயல்படுத்தப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 15.9.2. சென்னை சாந்தோம் CIBA வளாகத்தில்

**பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்கிட்டங்கியுடன் கூடிய மீன்களைக் கையாளும் மையம் அமைத்தல்**

சென்னையில் உள்ள தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை நிலையங்களை தரம் உயர்த்தும் நோக்கில், சென்னை சாந்தோம் பகுதியில் தேசீய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ.45 இலட்சம் செலவில் பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிரூட்டப்பட்ட கிட்டங்கி வசதிகளுடன் மீன்களைக் கையாளும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் 28.1.13 முதல் இயங்கி வருகிறது. சென்னை மாநகரிலுள்ள நுகர்வோர்களுக்கு தரமான மீன்களை நியாமான விலையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய தேவைப்படும் வசதிகளை இம்மையம் பூர்த்தி செய்யும்.

**15.9.3. நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் மதிப்பூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரிக்கும் மையம் நிறுவுதல்**

நாகப்பட்டினத்தில் மதிப்பூட்டிய மீன் உணவு பொருட்களை தயாரித்து விற்பனை செய்ய தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் Ïð£Œ ஒரு கோடி செலவில் மீன் உணவு பொருட்கள் தயாரிக்கும் மற்றும் மீன் கையாளும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தை தனியார் தொழில் முனைவோர் / ஏற்றுமதியாளருக்கு குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**15.9.4. தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் பனிகட்டி நிலையத்துடன்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை தரம் உயர்த்துதல்**

மீன்பிடித் துறைமுகங்களை தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் கடல் பொருள் ஏற்றுமதி ஆணையம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன், ஒரு பனிக்கட்டி நிலையம் மற்றும் ஒரு குளிர்காப்பு கிட்டங்கி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இவற்றிற்குத் தேவைப்படும் இயந்திரங்கள் கடல் பொருள் ஏற்றுமதி ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.12 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு இயந்திர தளவாடங்கள் நிறுவும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 15.9.5. நவீன நடமாடும் மீன் விற்பனைக் கூடங்கள்

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் 13 நவீன நடமாடும் மீன் விற்பனை ஊர்திகள் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மூலம் சுகாதாரமான முறையில் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப மீன் மற்றும் மீன் உணவு விற்பனை நியாயமான விலையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 9.10.2012 அன்று நடமாடும் மீன் விற்பனை திட்டம் துவக்கிவைக்கப்பட்டது.

### 15.9.6. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் பண்ணைகளின் தரம் உயர்த்துதல்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க ரூ.1.64 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சாத்தனூர், ஆழியார், அமராவதி,

திருமூர்த்தி மற்றும் பாலார்–பொறந்தலாறு ஆகிய இடங்களில் உள்ள மீன் பண்ணைகளில் பழுது நீக்கும் பணிகள் பொதுப்பணித்துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 15.9.7. ஆழியாரில் வண்ண மீன் விற்பனை நிலையம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள ஆழியார் நீர்த்தேக்கத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட வண்ண மீன் உற்பத்தி நிலையம் அமைத்திட தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ரூ.15 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட வகை வண்ண மீன் குஞ்சுகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும்.

### 15.10. நிதி நிலை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் விற்பனை, கடல் மீன் உணவகங்கள், எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை போன்ற வணிக ரீதியிலான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.10 கோடி (துணிக்கை செய்யப்படாதது) இலாபம் ஈட்டியுள்ளது.

## 16. 2013-14 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

2013-14 ஆம் ஆண்டுக்கு ரூ.467.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.285.01 கோடி வருவாய் செலவினம் மற்றும் ரூ.182.43 கோடி மூலதன செலவினம் ஆகும்.

## 17. நிறைவுரை:

மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்கள் எப்பொழுதும் மீனவா்கள் நலனை அரசினுடைய அதிமுக்கியத்துவ முன்னுரிமைகளில் ஒன்றாக வைத்துள்ளாா்கள். மீனவா்களின் வாழ்வில் வளம் ஏற்பட, இந்த அரசு பல மீனவா்நலம் மற்றும் வளா்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. மீன்பிடித்தடைக்கால நிவாரணத்தை ரூ.1,000/– லிருந்து ரூ.2,000/– மாக உயா்த்தியது மற்றும் மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கு ரூ.4,000/–ம் வழங்கும் சிறப்பு நிவாரணத்திட்டங்கள் ஏழை மீனவா் குடும்பங்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில் நிவாரணமாக அளித்துள்ளது. சிறந்த மற்றும் வெளிப்படையான ஆளுகையை வழங்கிடும் நோக்கோடு, அரசு அனைத்து நிவாரணத் தொகைகளையும் மின்னணு பரிவா்த்தனையில் வழங்கிட முடிவெடுத்து செயல்படுத்திவருகிறது.

மாண்புமிகு முதலமைச்சா் அவா்களின் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டு மீனவா்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாத்திட உறுதிபூண்டுள்ளது. மீனவா்கள், தங்களின் வாழ்வாதாரத்திற்காக, பாக் வளைகுடாப் பகுதியில் மீன்பிடிக்கும் போது அடிக்கடி இலங்கை கடற்படையால் தொடா்ந்து துன்புறுத்தப்படுதல் / தாக்கப்படுதல் மற்றும் கைது போன்றவற்றால் பாதிப்புக்குள்ளாகிறாா்கள். 2011 ஆம் ஆண்டு “மே” மாதத்திலிருந்து, மொத்தம் 505 மீனவா்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனா். மாண்புமிகு முதலமைச்சா் அவா்களால் குறித்த நேரத்தில் எடுக்கப்பட்ட தொடா் முயற்சிகளால் 505 மீனவா்களும் அவ்வப்போது விடுவிக்கப்பட்டுள்ளனா். மேலும், மாண்புமிகு முதலமைச்சா் அவா்கள், காணமல்போகும் / கைது செய்யப்படும் மீனவா்களின் குடும்பங்களின் துயா்துடைக்க வழங்கப்பட்டு வந்த தின உதவித் தொகையை ரூ.50/–லிருந்து

ரூ.250/–ஆக உயர்த்தியுள்ளார்கள். இவ்வாறு காணாமல் போகும் / இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள் உயர்கல்வி தொடர்ந்திட, தேவையான நிதியுதவியினை அளிக்க ரூ.25 இலட்சம் தனிநிதியையும் உருவாக்கியுள்ளார்கள்.

மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நிறுத்திடவும், சுகாதாரமான முறையில் மீன்களை கையாளவும் இந்த அரசு, பல புதிய உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களான மீன்பிடித்துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்களின் கட்டுமான பணிகளைத் தொடங்கியுள்ளது. இந்த முயற்சியால் கடல் பொருட்கள் ஏற்றுமதி வரும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தை, இந்தியாவிலேயே மீன்வளம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் முதன்மை மாநிலமாக மாற்றிட அரசு பல புதிய முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய தூண்டில் மீன்பிடி விசைப்படகுகள் வாங்கிட / மாற்றிட 50 விழுக்காடு மானியம் அளித்தல், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கடலோர மாவட்டங்களில் மீன்பதனிடும் பூங்காக்கள் நிறுவுதல், மீனவர்களுக்கு பல புதிய நிவாரணத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற திட்டங்கள் அனைத்து தரப்பினரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் மீன்வளம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் தொழிற்பயிற்சி பெற்ற மனிதவள தேவையை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, இந்தியாவின் கிழக்கு கடற்கரை மாநிலங்களிலேயே முதன் முறையாக நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுள்ளது. மீன்வளப் பல்கலைக்கழகமும், அதன் கீழ் இயங்கும் பயிற்சி நிலையங்களும், மீனவர்கள், மீனவ மகளிர், மீன்வளர்ப்போர் மற்றும் மீன்வளம் சார்ந்த

தொழில்முனைவோருக்கு திறன்மேம்பாட்டிற்குத் தேவையான பயிற்சிகளை அளிப்பதோடு, மீன்வளத்துறையின் அனைத்து நிலைகளிலுமுள்ள பயிற்சி பெற்ற மனிதவள தேவையை பூர்த்தி செய்யும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தின் மீன்வள மேம்பாட்டிற்காக, தொலைநோக்கு பார்வையுடன் 2010-11ம் ஆண்டின் நிதி ஒதுக்கீடான ரூ.193.32 கோடியிலிருந்து 2013-14ஆம் ஆண்டிற்கு ரூ.467.44 கோடியாக உயர்த்தியுள்ளார்கள். மீன்வளத்துறையின் மேம்பாட்டிற்கான இந்த உத்வேகம், வரும் ஆண்டுகளில் ஆக்கப்பூர்வமான பலனை அளிக்கும் என்பது உறுதி.

**கே.ஏ. ஜெயபால்**
**மீன்வளத்துறை அமைச்சர்**